Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

..ர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 09 (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :123

ஹொறாயஸ் ஒளிச்சுடர் பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-2195)

## ..ரசியல் நிலைமை குறித்து ..வி.பி. – ஈ.பி.டி.பி. பேச்சு!

(கொழும்பு)

..ஜே.வி.பியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்..ம் (ஈ.பி.டி.பி) நேற்று கொழும்பில் ..தித்து பேச்சு நடத்தின.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி. சார்பில் ..ன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, ..பலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செய..ளர் விமல் வீரவன்ச ஆகியோரும், ஈ.பி..பி. சார்பில் அந்தக்கட்சியின் செயலாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ..ல்வியங்காடு விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்!

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்தார். கல்வியங்காடுச் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோபல் பரிசுக்குழுத் தலைவரை தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு!



ஜரோப்பாவிற்கு விஜயம் செய்திருக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழு ஒஸ்லோவில் நோபல் பரிசுக்குழுத்தலைவரைச் சந்தித்து பேச்சு நடத்தியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் எதிர்காலம்; ஜனாதிபதி ஆலோசனை!

(யாழ்ப்பாணம்)

புதிதாக அமைக்கப்பட்ட ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இந்தக் கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான கருத்தரங்கில் கொழும்பு அதிகாரிகளும்!

(கொழும்பு)

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமாதானம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று நடைபெற்றது. யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அரசியல் அமைப்பு விவகார அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் உட்படப் பலர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்; சமாதான முயற்சிகளைப் பின்தள்ளும்!

## சந்திரிகாவுக்கு ஆனந்தசங்கரி எச்சரிக்கை

(கொழும்பு)

**இந்தியாவுடன் இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சி - தற்போதைய நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருக்கும் என்றும், அது தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு மேலும் பின்னடைவாக அமையும் என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எச்சரித்துள்ளார்**

..ற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி ..கையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பிலே .. இவ்வாறு தெரிவித்தார்.

..றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு ..ரம்ப..ன இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை ..ணி நேரம் இடம்பெற்றதாக சந்திப்புக் ..றித்து ஆனந்த சங்கரி வெளியிட்ட ..றிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சமாதான முன்னெடுப்பிற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்துவந்த நோர்வே அரசின் ஒத்துழைப்பை தொடர்ந்து பெறவேண்டும் என்ற எனது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். அத்தகைய அடிப்படையில் தான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து சர்வதேசம் உன்னிப்பாக அவதானிப்பு!

### உலகவங்கிப் பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனித்து வருவதாக - இலங்கைக்..ன உலகவங்கியின் பணிப்பாளர் பீற்றர் ஹேரோல்ட் கருத்து தெரிவித்தார்.

தேசிய வர்த்தக சம்மேளனத்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது-

இலங்கையின் அபிவிருத்திக்கு முதலீட்..ளர்கள் தொடர்ந்தும் முதலீடுகளைச் செய்ய வேண்டும் ஏனெனில், சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இலங்கையிலுள்ள அரசியல் கட்சி..ின் முக்கிய நோக்கம், நாட்டின் சமாதானத்தின் பக்கம் மட்டும்தான் இருக்க வேண்டும். சமாதான நடவடிக்கையை வெறுமனே ஒரு சிறிய விடயமாக கருதக்கூடாது. இதன் மற்றுமோர் நடவடிக்கையாக போர்நிறுத்த உடன்படிக்கை விளங்குகிறது.

தற்போது சமாதான நடவடிக்கைகள் எந்தப்பக்கம் சென்று கொண்டிருக்கின்றது என சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கமையவே, இலங்கைக்கு எவ்வளவு நிதி வழங்க வேண்டும் என சர்வதேச சமூகம் தீர்மானிக்கும். இலங்கையிலுள்ள தனியார் வர்த்தகத் துறையினர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முக்கியதாரர்களாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## சுதந்திர தினத்தை புறக்கணிக்குமாறு வெகுஜன அமைப்புகள் வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்றுவரை தமிழ்மக்கள் சிங்களப் பேரினவாதிகளாலும், சிங்கள ஆட்சியாளர்களாலும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். எனவே, வரும் சுதந்திரதினத்தை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழர்களை இனரீதியாக ஒழிப்பதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – பிரதமர் இழுபறி; இன்னமும் இணக்கம் இல்லை!

### மனோ தித்தவெல பேட்டி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் ஏற்பட்டுள்ள அமைச்சுக்கள் பற்றிய இழுபறி இன்றும் தீர்க்கப்படவில்லை என்று மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம இணக்கப்பாட்டுக்காக ஜனாதிபதி சார்பில் பங்குபற்றிய மனோ தித்தவெல தெரிவித்துள்ளார்.

அடுத்து ஓரிரு வாரங்களில் இதற்கு தீர்வு வரவேண்டும். அதற்குமேல் பேசிக்கொள்ளாமல் பதில் சாத்தியமில்லை. ஆனால் இதில் நம்பிக்கை வைக்கத்தேவையில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பிக்கான கூட்டணி ஒரே அரசியல் கூட்டணி. ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அமைதி வழியினை மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் கடைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாத குழு தாக்கியதில் ஈழத்தமிழர் லண்டனில் பலி!

(லண்டன்)

இனந்தெரியாத குழுவொன்றினால் லண்டன் நகரத்தில் இலங்கையர் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றது.

லண்டன் ஈஸ்ட்ஹாம் என்ற இடத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் மகேஸ்வரன் கணேசன் என்ற இலங்கையராவார். வேலைத் தளத்திலிருந்து தனது வீடு நோக்கி சென்றுகொண்டிருந்த சமயமே இவர் இனந்தெரியாத குழுவினரால் தாக்குதலுக்குள்ளாகினார்.

தாக்குலில் காயமடைந்த கணேசன் லண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி கூட்டணி டக்ளஸ் தேவானந்தா வரவேற்பு!

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு, அரசியல் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணபடவேண்டும். இத்தகைய அரசியல் பேச்சுக்களில் சம்பந்தப்பட்ட அனைதது்த் தரப்பினரையும் உள்ளடக்க வேண்டும்.

இது சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே காணப்பட்டுள்ள உடன்படிக்கையில் காணப்படும் ஒரு அம்சமாகும். இதனால், இந்த உடன்பாட்டை வரவேற்பது பொருத்தமாகும். இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் - இந்த இரு கட்சிகளும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் இனப்பிரச்சினையையும், புலிகளின் பிரச்சினையையும் தனித்தனியாக இனங்கண்டுள்ளனர். சுதந்திரக் கட்சியினர் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் இலக்கை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணியினர் அதிகாரப்பரவலாக்கல் என்பதை வலியுறுத்த முற்படுகின்றனர். எனினும், மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சி காண்பதே ஈ.பி.டி.பியினராகிய எமது நிலைப்பாடு.

இதனை வலியுறுத்தும் வகையிலும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்தும் வகையிலும் எமது செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி என்ற வகையில், தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்து தேசிய கட்சிகளுடன் நல்லுறவைக் கட்டி வளர்க்கத் தொடர்ந்து பாடுபடுவது என்றும்,

புலிகள் அராஜகப் போக்கின் காரணமாக தமிழ் பேசும் மக்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து அனுபவித்துவரும் துன்ப, துயரங்களை அம்பலப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்றும்,

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணானதும், மக்களால் ஏற்றுக் கொள்ள இயலாததுமான புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவக் கொள்கையை முற்றாக நிராகரிப்பது என்றும் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



யாழ்.மத்திய கல்லூரியில் மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட நிதி மூலம் அமைக்கப்பட்ட நூலகம் ஒன்றை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்துவைப்பதையும், அருகில் கல்லூரியின் அதிபர் க.இராசதுரை உட்பட நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசுபெற தெரிவானோர் விபரம்

(இடைக்காடு)

சந்நிதியான் ஆச்சிரமம், ஞானச்சுடர் வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில், பரிசுபெறத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தை மானிப்பாய் - சங்குவேலி வடக்கைச் சேர்ந்த த.தர்சினியும், இரண்டாம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த வேலரசியும், மூன்றாம் இடத்தை சங்கானை ஏழாம் கட்டையைச் சேர்ந்த ஞா.அபிராமி ஆகியோரும் பெற்றுள்ளனர். இவர்களுடன் மேலும் 20 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (76)

## ஒன்றுகூடுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களால் வருடந்தோறும் வெளியிடப்படும் 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டுக்கான புகைப்படம் எடுப்பதற்கு மேற்படி பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள் அனைவரையும் நாளை பி.ப 5 மணிக்கு விவசாய பீடத்தில் ஒன்றுகூடுமாறு விவசாய பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (68)

# தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும்

## ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மகேஸ்வரன்

தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும், சகோதரத்துடனும் வாழ்வோமேயானால், எமது சந்ததியினரின் வாழ்வில் பிரிவினையை ஏற்படுத்தமுடியாது.

இவ்வாறு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஹஜ் பெருநாளையொட்டி அமைச்சர் விடுத்த வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியுடனும் ஹஜ் பெருநாளை கொண்டாடுவதையிட்டு - இந்து கலாசார அமைச்சு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

பண வசதியும், தேகாரோக்கியமும் கொண்ட எந்தவொரு இஸ்லாமியர் மீதும் கடமையாக்கப்பட்ட இந்த நன்நாளில் மக்கா நகரில் ஒன்றுசேர்ந்து, இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையான ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதைப்போன்று- இலங்கையில் வாழும் முஸ்லிம்-தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் எந்தவித சந்தேகங்களுக்கும் இடங்கொடுக்காது வாழ்க்கையை வாழ்வோமேயானால், எமது சந்ததியினரின் வாழ்வில் பிரிவினையை என்றுமே எவராலும் ஏறபடுத்த முடியாத நிலையை ஏற்படுத்த தமிழ் பேசும் மக்களாகிய நாம் உறுதி கொள்ளவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனசமூக நிலையம் திறப்பு

அரியாலை அருணோதய சனசமூக நிலையம் 1995 ஆம் ஆண்டு ரிவிரச நடவடிக்கையால் அழிக்கப்பட்டது. அதனைப் புனரமைப்பதற்கு முதல்கட்டமாக - பாலர் பாடசாலை, வாசிகசாலை என்பவற்றை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் நுண்கருத் திட்டத்தின் கீழ் கட்டி வழங்கியுள்ளது.

புனரமைக்கப்பட்ட நிலையத்தினை நாளை பிப 4 மணிக்கு யாழ். மாவட்ட அரசஅதிபர் செ.பத்மநாதன் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைப்பார்.

# பெண் இராணுவ சிப்பாய் கொலை; வழக்கிலிருந்து எட்டுப்பேர் விடுதலை

(வடமராட்சி)

சாவகச்சேரிப் பகுதியில் இராணுவப் பெண் சிப்பாய் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்த சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பெண் இராணுவ சிப்பாய்கள் எட்டுப் பேரை சாவகச்சேரி நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி சாவகச்சேரி நகரிலுள்ள இராணுவ பெண் மருத்துவ நிலையம் ஒன்றில் பெண் இராணுவ சிப்பாயான சந்திரிகா பிரியதர்சினி என்பவரே மர்மமான முறையில் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த மருத்துவ முகாமிலிருந்த எச்.கேவகே, எம்.கேமமாலா, புஸ்பலதா, பி.எம்.சுவர்ணலதா, பி.பத்மகாந்தி, சி.மல்காந்தி, டபிள்யு. மெனிக்கா, பி.எம்.ஜெயசிங்க, எம்.சி. புஸ்பகுமாரி ஆகிய எட்டுப் பேரும் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தின் பணிப்பின்பேரில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஜெயசிங்க, புஸ்பகுமாரி ஆகிய இருவரையும் தவிர ஏனைய எட்டுப் போரையும் விடுவிக்குமாறு சட்டமா அதிபர் பணிப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து, எட்டுப் பேரையும் விடுதலை செய்த நீதிவான் - இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார். (29)

## விளையாட்டுப் போட்டி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என விளையாட்டு அலுவலர் முகுந்தன் தெரிவித்தார்.(72)

# கடலோட்டு பயிற்சி வகுப்பு நாளைமறுதினம் ஒத்திவைப்பு

யாழ்.கடற்தொழில், கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில், நாளை ஆரம்பிப்பதாக இருந்த பயிற்சி வகுப்பு அரசாங்கத்தின் விடுமுறை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்து உள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிகள் நாளை மறுதினம் ஆரம்பமாகுமெனவும், அதற்குத் தெரிவாகிய விண்ணப்பதாரிகள் அன்றையதினம் தவறாது இணைந்து கொள்ளும்படியும் அதிபர் மேலும் தெரிவித்தார். (206)



கேணல் கிட்டு நினைவாக நடத்தப்பட்ட சிரமதானப் பணியில் இணுவில் வைத்தியசாலை வளாகத்தில், தேசிய எழுச்சிப் பேரவையினரால் மரம் நாட்டும் பணி இடம்பெற்றபோது, நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.குமரவேல், வலி.தெற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலான், தேசிய எழுச்சிப் பேரவை வலிகாம பிரதேச செயலாளர் செல்வராசா ஆகியோரைக் காணலாம்.

# விவேகானந்தரின் ஜெயந்தி தினத்தையொட்டி நடைபெற்ற சமய அறிவுப்போட்டி முடிவுகள்!

(உடுவில்)

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினத்தையொட்டி இந்த வருடம் நடத்தப்பட்ட சமயத்திறன் சார் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

### கீழ்ப்பிரிவு

**கட்டுரை**

கலொக்கணநாதன் யஸ்மிலா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சிவலோகநாதன் தவசீலன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சக்திதாஜினி சந்தானகுமாரசர்மா (ஸ்கந்தவரோதய கல்லூரி), உத்தமகுமாரன் சிவகுருநாதன் (கொக்குவில் இந்துக்கல்லூரி).

**கவிதை**

சிவலோகநாதன் தவசீலன், (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**பேச்சு**

காயத்திரி சிறிகந்தவேல் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கலொக கணநாதன் உஷானந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), சகானா பிரேமராஜா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

### மத்திய பிரிவு

**கட்டுரை**

நவரட்ணம் நவராஜகுமாரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சிவகுருநாதன் வல்லவக்குமரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அமுதயோகன் கிரிசாந்.

**கவிதை**

இராஜலட்சுமி மார்க்கண்டு, நகுலதாசன் ஜெயதாசன் (வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), சிவகுருநாதன் வல்லவக்குமரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**பேச்சு**

நவரட்ணம் நவராஜகுமரன் (யாழ். இந்துக் கல்லூரி), சஸ்மிதா இரத்தினசிங்கம் (வேம்படி உயர்தர பாடசாலை), யோகலிங்கம் சுதாகரன், இராஜலட்சுமி மார்க்கண்டு.

### மேற்பிரிவு

**கட்டுரை**

சிவகுமார் சிவரூபன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), பவித்ரா சுப்பிரமணியஐயர் (செங்குந்தா இந்துக் கல்லூரி), சுபாஜினி இராசதுரை (வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

**கவிதை**

யூட் பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சுபாஜினி இராஜதுரை (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஞானச்சந்திரன் போல் அன்ரன் (இணுவில் இந்துக் கல்லூரி).

**பேச்சு**

ஞானச்சந்திரன் போல் அன்ன், அந்தோனிப்பிள்ளை ஜோசெப் அனுசன் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்), சுபாஜினி இராசதுரை.

போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.

பரிசில்கள் இன்று மாலை 4 மணிக்கு நல்லை ஆதீனக் கலா மண்டபத்தில் ஆன்மீக எழுச்சி விழாவில் வழங்கப்படும். (101)

## சிறு விளம்பரம்

### தேவை

தனியார் மருத்துவமனையில் கடமை புரிவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தங்கும் இடவசதியும் உண்டு.
தொடர்பு:- விளம்பர இல. 24, மே/பா நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (615)

### மணமகள் தேவை

மறுமணம் செய்வதற்கு 30 - 40 வயதிற்கு இடைப்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு:- விளம்பர இல. 23, மே/பா நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (614)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2197)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், கிரண் நடித்த
வின்னர்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
How To Lose A Guy In 10 Days (சி-2196)

# வொஷிங்ரன் மாநாட்டின் பின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

வொஷிங்ரனில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்குப் பின்னர், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஒரு இணக்கப்பாடு ஏற்படுமென நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

நோர்வேயில் வைத்து செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த மாதம் 17 ஆம் திகதி அமெரிக்கத் தலைநகர் வொஷிங்ரனில், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடொன்று நடைபெறவுள்ளது.

அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் - நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகளுடன், ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளும் கலந்துகொள்ளவுள்ளன.

இந்த மாநாட்டின்போது, இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி தொடர்பாக ஆராயப்படும்.

அரசியல் போட்டிகள் காரணமாக, இலங்கை இனப்பிரச்சினை விடயத்திலான தீர்வு பின்னோக்கிச் செல்கிறது. தற்போது ஒரு ஸ்தம்பித நிலையே காணப்படுகிறது. இந்த மாநாட்டில் இந்த நாடுகள் எடுக்கும் தீர்மானத்தினால் முறுகல்நிலை தணியும் எனக் ஹெல்கிசன் தெரிவித்தார். (01)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு - கிழக்கில் 785 கோடி ரூபா செலவில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், பாரிய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த மாத நடுப்பகுதியில் இந்தத் திட்ட வேலைகள் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்குக் கரையோர சமூக அபிவிருத்தித்திட்டம் என்ற பெயரில் இந்தப் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் கரையோரம் சார்ந்த பகுதிகளிலும், ஏற்கனவே உதவித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாத பகுதிகளிலும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமென இந்தத் திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எச்.ருலூஸ் தெரிவித்தார்.

## வாகனக் கடத்தலில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது!

தென்னிலங்கையிலிருந்து வாகனங்களைக் கடத்திவந்து, வடபகுதியில் விற்பனை செய்து வந்த இருவரை ஹபரணைப் பொலிஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யும்போது அவர்களிடமிருந்து, கடத்தப்பட்ட 4 வாகனங்களும் ஒரு தொகுதி ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆறுமாத காலத்திற்கு மேலாக வாகன கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இவர்கள் - 50 இற்கு மேற்பட்ட வாகனங்களை இதுவரை கடத்தியுள்ளதாகவும, அவற்றை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுவந்து விற்பனை செய்து வந்ததாகவும், விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இவர்களின் கைதுமூலமாகக் கடத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய மேலும் பலதகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் வாகனக்கடத்தலில் ஈடுபட்டுள்ள வேறு நபர்கள் தொடர்பாகவும் தகவல் அறியமுடியுமென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.(01)

# மனோ - மலிக் சந்திப்பு மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்கள், கட்சி இணைவுகள், அதனால் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டு - ஆவணங்களைப் பரீட்சிக்க அவகாசம் தேவை என்பதால், நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த மனோ - மலிக் சந்திப்பு, பிற்போடப்பட்டதாகத் தெரிவிகசுப்படுகிறது.

இரண்டாவது தடவையாக இப்படியான சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கும் அரசியல் வட்டாரங்கள் - ஜனாதிபதியும், பிரதமரும், அவர்களது கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து, நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாளவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடரவும் ஒரு சமரசத் தீர்வைக் காணக்கூடிய இந்த சந்திப்பு, பிற்போடப்பட்டுவருவது வருத்தத்திற்குரியது என்று கருத்துத்தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த செவ்வாய்க்கிழமை மீண்டும் மனோ - மலிக் சந்திப்பு இடம்பெறும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில், பாதுகாப்பு அமைச்சை மீள ஒப்படைத்தால் மட்டுமே மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடரலாம் என்று கூறி வந்த ஜீ.எல்.பீரிஸ், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடரவும், யுத்தநிறுத்தத்தைப் பேணவும் ஏதுவான பாதுகாப்பு அமைச்சின் முக்கிய பொறுப்புக்களை ஜனாதிபதி பகிர்ந்து கொண்டு, எழுத்துமூலம் உறுதிதரும் பட்சத்தில் - தமது கட்சி பேச்சுவார்த்தைகளைத் தொடரத் தயாராகவுள்ளது என்று தெரிவித்ததையடுத்து, மனோ - மலிக் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களைச் சரியான வகையில் பகிர்ந்துகொண்டு, பேச்சுக்களைத் தொடரக்கூடிய ஒரு ஒப்பந்தத்தை ஜனாதிபதி - பிரதமருக்கிடையில், மனோ-மலிக் கூட்டணி உருவாக்கும் பட்சத்தில், விரைவில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கலாம் என்றும், இத்தகைய ஒப்பந்த நகலொன்றை உருவாக்கும் நோக்குடனேயே சந்திப்பு அடுத்தவாரம் வரை பின்போடப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பு தமிழ்ப் பகுதிகளில் ஹெரோயின் விற்பனை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்ட செயற்பாடுகளினால் ஹெரோயின் விற்பனை அதிகரித்துள்ளதாகப் பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

சட்டவிரோதமாக ஹெரோயினை கடத்தி வந்து தமிழ் இளைஞர்கள், மாணவர்களிடம் விற்ற சிலர் கைதுசெய்யப்பட்ட போதும், ஹெரோயின் விற்பனை அதிகரித்துவருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டவர்கள் பழவியாபாரி என்ற போர்வையிலேயே செயற்படுகின்றனர். இரு தினங்களுக்கு முன்பு செயற்கைக்காலுக்குள் ஹெரோயின் கடத்தி வந்த நான்கு நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதிகமாக ஹெரோயின் ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களிலேயே விற்பனை செய்யப்படுகின்றன. மிகக்குறைந்த விலையில் பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப் பொருளை விற்று, தமிழ்ச்சமூகத்தினை போதைக்கு அடிமையாக்கும் சதித்திட்டங்களாக இவை இருக்கின்றன என விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

## தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ பாராட்டு

கடந்த இரண்டு வருடகால சமாதான முயற்சிகளின்போது, போராளிகளை ஒற்றுமையாக ஒரேகுடையின்கீழ் பேணிவந்தமைக்காகப் பிரபாகரனைப் பாராட்ட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.



இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து புதுடெல்கியில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தாக ரைம்ஸ் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட அயர்லாந்துச் சமாதான முயற்சிகளின்போது, ஐ.ஆர்.ஏ.இயக்கத்தினர் தம்முள் பிளவுபட்டது போல, விடுதலைப் புலிகள் தம்முள் முரண்படாமல் இருக்குமாறு பிரபாகரன் பார்த்துக்கொள்வது பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்ட இவர், இத்தகைய ஒருவருடன்தான், நாம் பேச்சுவார்த்தை நடாத்தமுடியும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய இலங்கை என்பது பேணப்படவேண்டும் என்பதுடன் இணக்கப்பாட்டு முயற்சிகளில் தமது கடைசி எல்லை இது என்றும் குறிப்பிட்ட இவர், அதற்கு அப்பாற்பட்ட எந்தவொரு தீர்வு தொடர்பாகவும் தாம் பேச்சுவார்த்தை நடாத்தத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் அங்கீகாரத்துடனேயே புலிகளுக்கு ஹெலிகொப்டர் வசதி!

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

பிரதமர் தலைமையிலான சமாதானச் செயலகம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே, புலிகள் இயக்கத்தின் சில உறுப்பினர்களைக் கிளிநொச்சியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு ஹெலிகொப்டர் மூலம் அழைத்து வருவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கடந்த வியாழக்கிழமை மாலை விடுதத செய்தி அறிக்கையில் குறிப்பிட்டார்.

புலிகள் இயக்கத்தின் சில அங்கத்தவர்களைக் கிளிநொச்சியிலிருந்து கட்டுநாயக்கவுக்கு அழைத்து வருவதற்குப் பிரதமர் தலைமையிலான சமாதான செயலகம் - பாதுகாப்பு அமைச்சரிடம் அனுமதிகோரி இருந்தது.

இது குறித்து ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் புலிகள் இயக்கத்திற்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்று, போக்குவரத்து பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

ஆனால், கட்டுநாயக்க மூலம் அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்றமை தொடர்பான நடவடிக்கைகளைச் சமாதான செயலகமும், விமானப் போக்குவரத்து அமைச்சுமே வழங்கியது.

## நல்லிணக்கசபை தலைவர்களின் பதவி பத்தாண்டுகளாக நீடிப்பு

நல்லிணக்கசபைகளின் தலைவர்களின் பதவிக்காலத்தை பத்து வருடங்களாக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நல்லிணக்கசபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா, நல்லிணக்கசபையின் ஆணையாளர் நாயகம் ஆரியரட்ண ஆகியோரும், ஐந்நூறுக்கு மேற்பட்ட நல்லிணக்க சபைத்தலைவர்களும் கலந்துகொண்டனர்.

நீதிமன்றத்து வழக்கு விசாரணைகளில் பங்குபற்றுவதற்கு முன்பதாக, அந்த வழக்குகளில் தலையிட்டு நல்லிணக்க சபைகள் பல வழங்குகளை தீர்த்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இவ்வழக்கு கிராம மட்டங்களில் உள்ள பிரச்சினைகள், பிணக்குகள் முதலியவற்றிற்கு உரிய தீர்வுகளை வழங்கி, பிரச்சினைகளை தீர்த்துள்ளன.

ஆகவே, இத்தகைய செயற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு நல்லிணக்கசபையின் தலைவர் பதவியை பத்து ஆண்டுகளுக்கு அதிகரிக்கும் தீர்மானம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஏடுக்கப்பட்டுள்ளது. (01)

## மாகாணசபை தேர்தல்கள்; நாடாளுமன்றில் விவாதம்.

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் இரு மணிநேரம் விவாதம் நடத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல் நடைமுறைகள் தொடர்பாகப் புதிதாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் இணங்கி இருப்பதாகவும், அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இந்த சட்டமூலத்தில் மாகாணசபைகள் கலைக்கப்படும் தினம் குறிப்பிடவில்லை.

சட்டம் செயற்பாடுகள் மூலம் பெப்ரவரி 8 ஆம் திகதி வடமேல் மாகாணசபை கலைக்கப்படும். இந்த சட்டத்தின் நோக்கம் ஏனைய ஏழு மாகாணங்களையும் அந்தச் சந்தர்ப்பத்தில் கலைத்து, தேர்தலை நடத்துவதாகும். எனவே, ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஏழு மாகாணங்களிலும் தேர்தல் நடத்த முடியும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவித்தார்.



ஒஸ்லோவில் நோர்வே வெளியுறவு அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு பேச்சு நடத்துகிறது.

## பொலிஸ் மா அதிபருக்கு பாராட்டு

(கொழும்பு)

எத்தகைய பிரச்சினைகள், இடையூறுகள் ஏற்பட்டபோதும் தனது இலட்சியத்தை தலைவர் பிரபாகரன் கைவிடவில்லை என்பதை பொலிஸுக்கு பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் போர்ச்சூழல் நிலவிய காலத்தில் காவல் துறையினரின் பல்வேறு செயற்பாடுகளினால் மக்கள் பல சிரமங்களை அனுபவித்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

போர்க்காலத்தில் வீதித்தடைகள், சோதனை நிலையங்கள், சுற்றி வளைப்புத் தேடுதல்கள் போன்ற பல்வேறு படைத்துறை நடவடிக்கைகளினால் மக்கள் பல சிரமங்களை அனுபவித்ததாகத் தெரிவித்துள்ள பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா, இதனால் காவல்துறையினர் மீது நம்பிக்கை இழந்து விட்டதாகக் கூறியுள்ளார்.

## பாவனைக்குதவாத தேயிலை பொலிஸாரால் கண்டுபிடிப்பு

பாவனைக்கு உதவாத சுமார் ஆறாயிரம் கிலோக்கிராம் தேயிலை - கொழும்பு நகரப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தேயிலையினைக் கம்பளையிலிருந்து கொழும்பு கிராண்பாஸ் பகுதிக்கு லொறி ஒன்றின்மூலம் எடுத்துவந்ததாகக் கூறப்படும் ஒருவரையும் சந்தேகத்தின் பெயரில் கொழும்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேசமயம் அண்மையில் கொழும்பில் கைப்பற்றப்பட்ட ஒருகோடி ரூபா பெறுமதியான பாவனைக்கு உதவாத தேயிலை வைத்திருந்ததாகக் கைதுசெய்யப்பட்ட ஐவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (01)

# அக்ரத்தை அவமானப்படுத்தாதீர் மியான்டட்டுக்கு கபில் கண்டனம்!



இந்திய அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதானுக்கு ஆலோசனைகள் வழங்கிய அக்ரமை அவமானப்படுத்த வேண்டும்என சிலர் விரும்புகின்றனர் என, பாகிஸ்தான் பயிற்சியாளர் மியான்டட்டுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார் முன்னாள் இந்திய அணித்தலைவர் கபில்தேவ்.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தொடருக்கு வர்ணனையாளராக பாகிஸ்தானின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் பணியாற்றி வருகின்றார்.

இந்தப் பயணத்தின்போது, இந்திய வேகப் பந்துவீச்சாளரான பாதானுக்கு பந்து வீச்சுக் குறித்த சில ஆலோசனைகளை வழங்கினார்.

இதை தற்போதைய பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் ஜாவிட் மியான்டட் கடுமையாகக் கண்டித்துள்ளார். இந்திய அணி அடுத்ததாகப் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ள நேரத்தில், அக்ரம் எப்படி இந்திய வீரர்களுக்குப் பந்துவீச்சுப் பயிற்சி அளிக்கலாம். மேலும், ரிவர்ஸ் ஸ்விங்கைச் சமாளிப்பது எபபடி என்ற ஆலோசனையையும் வழங்கி வருகிறார் என்று குற்றஞ்சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில் தேவ் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஒரு இளம் வீரர் அனுபவ வீரரிடம் ஆலோசனை பெறுவதில் என்ன தவறு இருக்கிறது. என்னிடம் வேறுநாட்டு வீரர் ஒருவர் வந்து கேட்டால், நான் தாராளமாக அவருக்கு எனக்குத் தெரிந்ததை எடுத்துக்கூறுவேன். இது வீரர்களின் சுதந்திரம். இதை ஏன் பயிற்சியாளரும், முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் எதிர்க்க வேண்டும். அவர்கள் அக்ரத்தை அவமானப் படுத்த வேண்டும் என விரும்புகின்றனர். அதனால்தான் இவ்வாறெல்லாம் பேசித்திரிகின்றனர் என்றார்.

# ரெனிஸ் வீராங்கனை மாட்டினா ஒய்வுபெறுகிறார்



அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் பிரபல ரெனிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா மகளிர் ஒன்றையர் பிரிவில் அதிக கிராண்ட் சிலாம் பட்டம் பெற்றவர். இவர் கடந்த பத்தாண்டுக்கு முன்பே ஓய்வுபெற்றுவிட்டார். பின்னர் இரட்டையர் போட்டியில் விளையாடுவதற்காக மீண்டும் களம் வந்தார். 47 வயதான நவரத்திலோவா தற்போது நடைபெற்றுவரும் அவுஸ்ரேலியா ஒப்பன் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் இந்திய வீரர் லியாண்டர் பயசுடன் இணைந்து விளையாடுகிறார். நவரத்திலோவா - பயஸ் ஜோடி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்தப் போட்டியோடு நவரத்திலோவா ஓய்வுபெறுகிறார்.

# தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகள் போட்டி மழையின் காரணமாகக் கைவிடப்பட்டது!

தென்னாபிரிக்க - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில், நேற்றுமுன்தினம் டேர்பனில் நடந்த மூன்றாவது போட்டி, மழை காரணமாக கைவிடப்பட்டது.



ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே மழை பெய்ததனால் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இதன்படி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் லாரா- தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்தது. இதில் பவல் 50, சர்வான் 29, ஆகியோரே ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர். மற்றைய ஆட்டக்காரர்கள் எவரும் (அணித்தலைவர் லாரா உட்பட) பெரிதாக சோபிக்கவில்லை. பந்துவீச்சில் கலிஸ் 3 விக்கெட்டுக்களையும், குளுஸ்னர் 2 விக்கெட்டுக்களையும், பொலக், என்ரினி, நெல் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அதன்பின் ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்கா 5 ஓவர்கள் விளையாடியபோது மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்த 5 ஓவர்களிலும் தென்னாபிரிக்கா ஒரு விக்கெட்டை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நடந்துமுடிந்த இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வென்று 2:0 என்ற நிலையில் முன்னணியிலுள்ளது.

# விளையாட்டு

## விளையாட்டு வீரர்களுக்கு ஓர் அறிமுகம்

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் முதன்மை பெறும் காலம் இது. உங்கள் பாடசாலை வீரவீராங்கனைகள் தம் திறமையை பல்வேறு மட்டங்களிலும் வெளிப்படுத்தியவர்கள் அவர்களின் திறமையை அங்கீகரித்துப் பாராட்ட "நமது ஈழநாடு" ஆர்வமாக இருக்கிறது.

உங்கள் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்ததும் மிகச் சிறந்த வீரர், வீராங்கனை பற்றிய விபரங்களை (BEST ATHLETE) அவர்களின் புகைப்படத்துடன் அனுப்பிவையுங்கள்.

அவர்கள் ஏன் சிறந்த வீரராக அல்லது வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார் என்ற சாதனை விபரத்துடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய (அதிபரின் உறுதிக் கடிதம் அவசியம்) முகவரி- நமது ஈழநாடு, இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பல்கலைகழகத்தில் விருதுகள் இரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் வருடாவருடம் நடாத்தப்படும் விருதுகள் இரவு நிகழ்ச்சி, இந்த முறையும் மிகவும் சிறப்பாக இடம்பெறவிருக்கிறது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விளையாட்டு அவையின் தலைவர் பொ.கிருபானந்தனின் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கலந்து சிறப்பிப்பார்.

இதன்போது, 2003 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கிய வீர வீராங்கனைகளுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.





யாழ்.மத்தியகல்லூரியினால் நடத்தப்பட்ட மாணவர்களுக்கிடையிலான நீச்சல் போட்டியில் மத்திய கல்லூரியின் அதிபர் பச்சைக்கொடியினை தாழ்த்தி நீச்சலை ஆரம்பித்து வைப்பதை முதற் படத்திலும், வள்ள ஓட்டப் போட்டியில் பங்குபற்ற ஐந்து இல்லங்களும் ஆயத்தமாக நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# கூட்டணியில் ம.தி.மு. கவுக்கு நான்கு தொகுதிகள் ஒதுக்கீடு

தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.கவிற்கு நான்கு நாடாளுமன்ற தொகுதிகள் ஒதுக்கப்படவுள்ளது. இதை ம.தி.மு.க.வும் ஏற்றுக்கொண்டுவிட்டது. இதை அடுத்து ஒதுக்கப்பட்ட தொகுதிகள் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

நாடாளுமன்ற தேர்தல் தொகுதிப் பங்கீடு தொடர்பாக, தி.மு.க. தேர்தல் குழுவைச் சேர்ந்த மு.க.ஸ்டாலினும், துரைமுருகனும், வேலூர் மத்திய சிறைக்குச் சென்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வெளியே வந்த ஸ்டாலினும், துரைமுருகனும் பேச்சுவார்த்தை குறித்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டனர். வைகோவைத் தான் ஏற்கனவே சிறையில் சந்தித்து நெடுநாளாகிவிட்டதால் மீண்டும் சந்திக்க வந்ததாக ஸ்டாலின் கூறினார்.

ம.தி.மு.க.விற்கு ஒதுக்கப்படும் 4 தொகுதிகள் தொடர்பாக வைகோவின் ஒப்புதல் பெறவே, இருவரையும் கருணாநிதி அனுப்பிவைத்தாக, அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்தன.

தி.மு.க. தரும் நான்கு தொகுதிகளுக்கு வைகோவும் சம்மதம் தெரிவித்துவிட்டதாக அந்தக் கட்சியின் தலைமையகமான தாயகம் தெரிவிக்கிறது.

முன்னதாக ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன் சிறையில் வைகோவைச் சந்தித்துப் பேசினார். வெளியே வந்த அவர் நிருபர்களிடம் பேசுகையில், நாங்கள் ஆறு தொகுதிகள் கேட்டோம். இதில் எத்தனை தொகுதிகள் தருவது, எதையெதைத்தருவது என்பது குறித்து, கலைஞர் முடிவு செய்வார்.

அவர் எத்தனை தொகுதிகள் தந்தாலும் அதை ம.தி.மு.க. மனப்பூர்வமாக ஏற்கும். எங்களுக்கு இந்தத் தொகுதிகள்தான் வேண்டுமென்று கேட்டு அவரைத் தொல்லைப்படுத்தவோ, பத்திரிகைகளுக்கு பரபரப்புச் செய்திகள் தரவோமாட்டோம்.

ம.தி.மு.காவும், தி.மு.க.வும் வெவ்வேறானவர்கள் அல்ல. இதனால் முதலில் கூட்டணியில் உள்ள பிறகட்சிகளுக்கு இடங்களை ஒதுக்கிவிட்டு, பிறகு எங்களைக் கூப்பிட்டு கலைஞர் பேசுவார் எனத் தெரிவித்தார்.

# சோ.மூலம் சிதம்பரத்துக்கு தொகுதி கேட்கிறார் ரஜினி!

இந்திய மக்களவைத் தேர்தலுக்கு காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின் பொதுச்செயலாளர் ப.சிதம்பரத்துக்கு ஒரு தொகுதி ஒதுக்கித்தரும்படி, தமிழக காங்கிரஸ் தலைவர் வாசனிடம் நடிகர் ரஜினிகாந் சிபார்சு செய்துள்ளார். இது தொடர்பாக துக்ளக் ஆசிரியர் சோ மூலமாக அவர் வாசனிடம் பேசியுள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு, 10 இடங்கள் ஒதுக்கப்படலாம் என்று தெரிகிறது. அதில் ஒரு இடத்தை சிதம்பரத்துக்கு ஒதுக்கிக்கொள்ளுமாறு தி.மு.க கூறியுள்ளது. இதற்கு சோனியாகாந்தி தயார்தான் என்றாலும், வாசன் உள்ளிட்ட பிற காங்கிரஸ் தலைவர்களுக்கு இதில் உடன்பாடில்லை. கிடைப்பதே 10, இதில் ஒன்றை அவருக்குத் தூக்கித் தருவதா என்று காங்கிரஸில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதனை அறிந்த சிதம்பரம் ரஜினியை அணுகியுள்ளார். ரஜினி தரப்பில் சோவிடம் இது குறித்துப் பேசப்பட்டது.

இதனை அடுத்து வாசனை நேரில் அழைத்துப் பேசிய சோ, ரஜினி தரப்பில் தனக்கு வந்திருக்கும் சிபார்சு குறித்து எடுத்துச் சொன்னதாகவும் ஆனால், வாசனிடம் இருந்து இதற்குசாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் தெரிகிறது.

அதே நேரத்தில், வாசன் சோவைச் சந்தித்துப் பேசியதில் தி.மு.க தரப்பு கடுப்பாகியுள்ளது. தி.மு.க தலைவர் கருணாநிதியை தொடர்ந்து விமர்சித்துவரும் சோவை இந்த நேரத்தில் வாசன் சந்தித்துள்ளது தி.மு.க.வுக்குத் தெரியவந்ததும், அறிவாலயத்தில் கோபம் கொப்பளித்தது. ரஜினி சிதம்பரம் விடயம் தவிர, தி.மு.க கூட்டணி விடயம் குறித்தும் சோவிடம் வாசன் ஆலோசனை கேட்டதாகவும், தி.மு.க தலைமை கருதுகிறது. ஏற்கனவே வாசன்மீது தி.மு.க சந்தேகப்பார்வையில் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் புதிய பணிமனையை, அதன் தலைவர் க.சிறிராஜன் - நாடா வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# கைது செய்யப்பட்டவர்கள் தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளும் அதிகாரமுடையவர்கள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குற்றம் புரிந்தவர்கள், சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் எவராயிருப்பினும் தமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் அதிகாரம் அவர்களுக்குள்ளதாக - யாழ்.மனித உரிமைகள் ஆணைகுழு விடுத்துள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றமொன்று தொடர்பாக கைது செய்யப்படும் ஒருவர் தான் கைது செய்யப்பட்ட காரணத்தை, தன்னை கைதுசெய்யும் அதிகாரியின் பெயர், பதவி, என்பவற்றை அறியவும் நெருங்கிய உறவினருடன் உரையாட, சட்டத்தரணியொருவரின் உதவியைப் பெறவும் உரித்துடையவர்.

அத்தோடு, கைதுசெய்யப்பட்டவர் பெண்ணாக அல்லது பதினெட்டு வயதிற்குக் குறைந்தவராக இருப்பின், தனது நம்பிக்கைக்கு உகந்த ஒருவரின் உதவியையும் அவரால் பெற்றுக்கொள்ளமுடியும்.

மிகவும் முக்கியமாக, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு 24 மணிநேரத்திற்குள் கைதானவர் ஒரு நீதிபதியின் முன் ஆஜர்படுத்தப்படவேண்டும். அவசியமானால், அரச மருத்துவர் ஒருவரைச் சந்திக்கவும், வைத்திய உதவிகளைப் பெறவும் முடியும். அதுபோலவே, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நேரத்தில் உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ சித்திரவதைக்கு உட்படுத்தப்படக் கூடாது. இவ்வாறு உட்படுத்தப்படின், அது கைது செய்யப்பட்டவரின் மனித உரிமையை, மீறும் செயலாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மாறாக, கைதி ஒருவர் நடத்தப்படும்போது, அது தொடர்பாக விசாரணைகளின் போது, நீதிபதிக்கு தெரியப்படுத்தவும். அல்லாவிடில் பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளவுமென அந்த பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது(தீ)

# நீண்டகாலமாக ஒளிராத மின்கம்ப விளக்குகள்

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி வீதியில், அமைந்துள்ள மின்கம்ப விளக்குகள் பல பழுதடைந்த நிலையிலுள்ளன. கடந்த ஆறு மாத காலத்திற்கு மேலாக இந்த மின்விளக்குகள் பழுதடைந்த நிலையிலேயே உளளதாக, அந்தப் பிரதேச பொதுமக்கள் தெரிவித்தனர். இதனால் அவ்வீதி இரவு வேளைகளில் இருண்ட நிலையிலுள்ளது. இதன் காரணமாக - வீதி விபத்துகள் பல ஏற்பட்டுள்ளதாகவும், இனியும் ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடைவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின்கம்ப விளக்குகள் எரியாதமையால் சிலவேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

## பஸ் நிலைய சூட்டுச் சம்பவத்தில்

# சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினர் இருவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையப் பகுதியில் பத்திரிகை விற்பனை செய்து கொணடிருந்த இளைஞன் மீது மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் மூவரில், இருவர் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வருட இறுதிப்பகுதியில் யாழ். பஸ் நிலையப்பகுதியில் 'ஈழநாதம்' பத்திரிகை விற்பனை செய்து கொண்டிருந்த வேளை இராணுவச் சிப்பாய் ஒருவர் - இளைஞன் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்திருந்தார். இதன்போது - சிறுவன் சிறு காயங்களுக்குள்ளானதுடன், மினி பஸ் ஒன்றின் நடத்துநர் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக, மூன்று இராணுவச்சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவின்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் இருவரை, முன்னர் பிணையில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் அனுமதித்திருந்த போதிலும், இவர்களைப் பிணைஏற்பதற்கு இராணுவ அதிகாரி மறுப்புத் தெரிவித்திருந்தார். இதனை அடுத்து நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் மேஜர் தரத்திலான அதிகாரி, இருவரையும் பிணையில் எடுப்பதற்கு முன்வந்ததை அடுத்து, இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடையவரென சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முதலாம் எதிரியின் பிணை மனுவை நீதிவான் நிராகரித்து தொடர்ந்தும் அவரை விளக்க மறியிலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(ச)

## குழந்தையொன்றின் தந்தை என்ற

# சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞருக்கு பிணை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

திருமணமாகாத பெண்ணொருவருக்குப் பிறந்த குழந்தையின் தந்தை எனும் சந்தேகத்தின் பெயரில், கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவருக்கு பிணை அனுமதி வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது. இது தொடரபாக மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் யுவதி ஒருவர், தனது இரண்டு வயது பிள்ளையை இன்னொருவருக்குத் தத்துக் கொடுப்பதற்காக நீதிமன்ற உதவியை நாடியிருந்தார். அதன்போது, பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பரிசோதித்த போது, அதில் தந்தையின் பெயர் இருக்கவில்லை. இதனால், சந்தேகமடைந்த நீதிவான், குறித்த யுவதியை விசாரணைக்கு உட்படுத்தியபோது, அந்தக் குழந்தை தவறான உறவில பிறந்தமை தெரிய வந்தது.

இதனால், குழந்தையின் தந்தையை உடனடியாக கைதுசெய்யுமாறு, நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து, யுவதியினால் குறித்த இளைஞர் - சுன்னாகம் பகுதியில் வைத்து அடையாளம் காட்டப்பட்டார். அடையாளம் காட்டப்பட்ட இளைஞரை கைதுசெய்த பொலிஸார் - யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு உததரவிடப்பட்டது.

இதுதொடர்பான, வழக்கு விசாரணைகள் கடந்த வியாழன் நடைபெற்றபோதே, குறித்த இளைஞர் சாரபாக சமர்பிக்கப்பட்ட பிணை மனு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

குறித்த - இளைஞர், குழந்தை, அதன் தாயார் மூவரையும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி உத்தரவிட்ட நீதிவான், சம்பந்தப்பட்ட இளைஞரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# தேங்கிக் கிடக்கும் ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கோரிக்கை

## மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர்

யாழ்.மோட்டார் திணைக்களத்தில் எஞ்சிக்கிடக்கும் வாகனப்பதிவுப் புததகங்களை எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதிக்குமுன் பெற்றுக்கொள்ளுமாறு, யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் 300 இற்கும் மேற்பட்ட வாகனப் புத்தகங்கள் உரிமையாளர்களால் பெறப்படாமல், தேங்கிக் கிடக்கின்றன. அவற்றைப்பெற்றுக்கொள்ளுமாறு பத்திரிகைகள்மூலம் பல அறிவித்தல்களை விடுத்தும் அவற்றைப் பெறுவதில் வாகன உரிமையாளர்கள் அக்கறை செலுத்தாமலுள்ளனர்.

பெப்ரவரி 6 ஆம் திகதிக்குப்பின்னர் இந்த வாகன அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் கொழும்புக்கே திருப்பி அனுப்பப்படவுள்ளன. இந்தப் புத்தகங்கள் பரிசோதிக்கப்படும்போதே, வாகன உரிமையாளர்கள் தமது கஷ்டங்களை உணரநேரிடும். மோட்டார் சைக்கிள், கார், பார ஊர்திகள், வான்கள் எனப் பல்வேறு வாகனங்களின் பதிவுப்புத்தகங்களும் எம்மிடம் பல மாதங்களாகத் தேங்கிக்கிடக்கின்றன. அவற்றைப்பெற்று, உரியவர்கள் தமது சிரமங்களைத்தீர்த்துக்கொள்வதையே நாம் விரும்புகின்றோம் என அவர் தெரிவித்தார். (ப)

## சின்னஞ் சிறு செய்திகள்

### கும்பாபிஷேக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அராலிதெற்கு செம்பித் தோட்டம் - ஸ்ரீ பரமேஸ்வரா ஞான வைரவ சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் நாளை ஆரம்பமாகவுள்ளன. நாளை மறுதினம் எண்ணைக் காப்பு சாத்துதல் இடம்பெறும்.(101)

### தாதியர் பற்றாக்குறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் தாதியருக்கு பற்றாக்குறை நிலவுவதால், பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை - வைத்திய அதிகாரி எஸ். அம்பிகைபாகன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இரண்டு தாதியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும், பதிலுக்கு ஒருவரும் நியமனம் செய்யப்படவில்லை. இதனால், வைத்தியசாலை பணிகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (24)

### தொலைபேசி இணைப்பு

(உடுவில்)

உடுப்பிட்டி உப - அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இதனால், இந்தப் பிரதேச மக்கள் நன்மை அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொலைபேசி வசதியினை தபால் திணைக்களம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளமையை இந்தப் பிரதேச மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். (116)

### புதிய இயக்குநர் சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்குப் புதிய இயக்குநர் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய தலைவராக மீண்டும் த.கிருஸ்ணராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இயக்குநர் சபை உறுப்பினர்களாக - யோ.மரியசீலன், ப.இராசேந்திரம், ச.பரமானந்தம், நா.சுந்தரலிங்கம், வி.லிங்கேஸ்வரன், சி.சிவகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், யோ.மரியசீலன் உப தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

### கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச் சங்கத்தினரின், இன்று நடைபெறவிருந்த கூட்டம், தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (72)

## சின்னஞ் சிறு செய்திகள்

### இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மானிப்பாய் றோடரிக் கழகங்கள் இணைந்து, இலவச மருத்துவ முகாமொன்றினை இன்று நடாத்தவுள்ளன. சுன்னாகத்திலுள்ள சபாபதி நலன்புரி நிலையத்தில் - காலை 10 மணி முதல் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் இலவசமாக மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

### காரைநகரில் சௌந்தரராஜனின் மகன்

காரைநகர் - வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு - இன்று இரவு 8 மணிக்கு இசைச்சக்கரவர்த்தி ரி.எம்.சௌந்தரராஜனின் மகன் ரி.எம்.எஸ். பால்ராஜ்ஜின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

### மருந்தகத்திற்கு புதிய கட்டடம்

புத்தூர் மத்திய மருந்தகத்திற்கு புதிய கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது பழைய கட்டடமொன்றிலேயே மத்திய மருந்தகம் இயங்கி வருகின்றது. தற்போது மருந்தகத்திற்கென புதிதாக ஒரு காணி கொளவனவு செய்யப்பட்டு அதில் புதிய கட்டடம் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது. (110)

### பிரிவுபசார விழா

மாசியப்பிட்டி கிராம அலுவலகராக இருந்து இடமாற்றம்பெற்றுச் செல்லும் ச.ஸ்ரீஸ்கந்தராசாவின் பிரிவுபசார விழாவும், புதிதாக வருகை தந்துள்ள கிராம சேவகரான எஸ்.சிவகுமாரின் வரவேற்பு பசார விழாவும் - இன்று காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளன. (101)

### வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஹஜ் தினத்தை முன்னிட்டு, நாளை பொது விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்ததையடுத்து, யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்றங்களில், அன்றைய தினம் நடக்கவிருந்த வழக்குகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports




# ஆசைப்பட்டீங்க அனுபவியுங்க



புன்னகை நீடிக்குமா?

இந்த வருடம் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கு மிகச் சுமையான காலமாகத்தான் இருக்கப்போகிறது. தை மாதத்திலிருந்து மார்கழி மாதம்வரை - ஒக்ரோபர் தவிர, ஏனைய பதினொரு மாதங்களும் சர்வதேச கிரிக்கெட் அட்டவணை மிக இறுக்கமானதாகவே இருக்கப்போகிறது.

பங்களாதேஷுக்கும், நியூசிலாந்துக்கும் - இவ்வருடத்தின் பின் அரைப்பகுதியில் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. அத்தோடு தென்னாபிரிக்காவின் இலங்கை விஜயமும் நடைபெறவுள்ளது. நீண்டகாலத்துக்குப் பின்னர் இவ்வகையான மிக நெருக்குவாரமான அட்டவணையொன்றை, இலங்கை அணி எதிர்கொள்கின்றது. அடுத்தமாதம் மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ளும் முகமாக அவுஸ்ரேலியா - இலங்கை வருகிறது. ஐந்து வருடங்களுக்கு முன் அவுஸ்ரேலியா - இலங்கை வந்தபோது, 1:0 என்றவாறு இலங்கையணி தொடரை வென்றிருந்தது. அத்தோடு, இந்தியாவும் பங்கு கொண்டிருந்த முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் இறுதிப்போட்டியில் இலங்கையிடம் தோல்வி கண்டிருந்தது.

பெப்ரவரியில் அவுஸ்ரேலியா - இலங்கை வந்துபோக ஜூன், ஜூலையில் இலங்கை அவுஸ்ரேலியா செல்லப்போகிறது. 1995/1996 இன், பின் இவ்வருடமே இலங்கை அவுஸ்ரேலியாவிற்குச் செல்லப்போகிறது. இதில் ஒரு விசேடம் என்னவெனில், பிரபல்யமான மைதானங்களில் அன்றிக் கடந்த வருடம் டெஸ்ட் ஆட்டத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்ட டார்வின், கெயின்ஸ் ஆகிய மைதானங்களிலேயே இரண்டு டெஸ்ட் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மறுபுறம் சிம்பாவேக்கு ஏப்ரல் மாதத்திலேயே இலங்கை அணி புறப்படுகிறது. 1999 இல் சிம்பாவே சென்ற இலங்கையணி, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றிபெற்றிருந்தது. அப்போது இலங்கையணியின் தலைவராக இருந்தவர் சனத் ஜயசூரியா.

ஆவணி மாதத்தில் இலங்கை வருவதாக இருக்கும் தென்னாபிரிக்க அணியின் விஜயம் - உறுதி செய்யப்படுமாக இருந்தால், மூன்று டெஸ்ட் போட்டிகளுடன் மூன்று அல்லது ஐந்து ஒருநாள் போட்டி யொன்று நடைபெறும் சாத்தியம் உள்ளது.

இலங்கை செப்ரெம்பர் அளவில் இங்கிலாந்தில் நடைபெறும் ICC சாம்பியன்சிப் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்கிறது. 2002 இல் இலங்கையில் நடைபெற்ற போட்டி முடிவில் இலங்கை, இந்தியா இருநாடுகளும் இணை சாம்பியன்களாகி, நவம்பரில் பங்களாதேஷ் செல்லும் இலங்கை அணி, தனது முதலாவது டெஸ்ட் தொடர் சுற்றுப்போட்டிக்காக அங்கு செல்வதாக அமையும். இறுதியாக வருடக் கடைசியில் நியூசிலாந்துக்கு இலங்கை அணி செல்லும். ஆட்டங்கள் பற்றிய முடிவு பின்னர் எடுக்கப்படும். கடந்தமுறை இலங்கை - நியூசிலாந்தை ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மட்டும் சந்தித்து, வெற்றிவாகை சூடியிருந்தது.

- **செந்தூரம்** -

## 2004 இலங்கை அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேசப்போட்டிகளின் அட்டவணை

| | | |
|---|---|---|
| இலங்கையில் | அவுஸ்ரேலியா | 3 டெஸ்ட் 5 ஒருநாள் பெப்ரவர/மார்ச் |
| சிம்பாவேயில் | இலங்கை | 2 டெஸ்ட் 3 ஒருநாள் ஏப்ரல/மே |
| அவுஸ்ரேலியாவில் | இலங்கை | 2 டெஸ்ட் ஒருநாள் ஜூன்/ஜூலை |
| இலங்கையில் | தென்னாபிரிக்கா | தீர்மானிக்கவேண்டும் ஒகஸ்ட் |
| இங்கிலாந்தில் | இலங்கை | ICC கிண்ணம் செப்ரெம்பர் |
| பங்களாதேஷில் | இலங்கை | தீர்மானிக்கவேண்டும் நவம்பர் |
| நியூசிலாந்தில் | இலங்கை | தீர்மானிக்கவேண்டும் டிசம்பர் |

# குட்டக் குட்டக் குனிய முடியாது

ஜனாதிபதி சட்டத்தரணி எட்லி பெரேரா பின்வருமாறு கூறுகின்றார். அநாவசியமான, தவறான கருத்துக்களை பிஷன்சிங் பேடி - இலங்கையின் சொத்தான முத்தையா முரளிதரனின் பந்துவீச்சுத் தொடர்பில் வெளியிட்டுள்ளார். இதன் மீது நியாயபூர்வமான சட்டநடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு உள்ளது. முத்தையா முரளிதரன் மீது பேடி தொடுத்துள்ள கணைகள், கிரிக்கெட் சார்பில் தொடர்பே இல்லாதவை.

அவை தனிப்பட்ட ஒர் நபரின் மீதான தாக்குதலாகவே கொள்ளப்படவேண்டும். இதனை மதிப்புக்குரிய ஒரு வீரனை - அவமதிக்கும் சர்வதேச சதித்திட்ட மாகவே பார்க்கவேண்டும் என்பவர் - தற்போது இலங்கை, அவுஸ்ரேலிய, ஐக்கிய இராச்சியம் ஆகிய வற்றைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணிகள், சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில், தன் தலைமையின் கலந்துரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



முரளி ஓராயிரம் குரல்கள்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருபத்தாறு விக்கெட்டுக்களை சரித்து, ஆட்டத் தொடர் நாயகன் பட்டம் வென்றபின்பே, பேடியின் விசக் கணைகள் முத்தையா முரளிதரனை மோசமாகத்தாக்கின. அதாவது, கடந்த டிசெம் பரில் **'THE AUSTRALIAN'** தினசரிக்கு பேட்டி கொடுத்த பேடி - இவர் ஒரு திருடன், கள்ளன், கொள்ளைக்கும்பலில் ஒருவன் **(BURGLAR, A THIEF, A DACOIT)** என்று அதில் முத்திரை குத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் அன்ரன் ஜயசூரியவின் வேண்டுகோளின்படியே இந்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இவர் பேடியின் அவதூறு வார்த்தைகள் தொடர்பில் கருத்துக் கூறுகையில், முரளியின் பந்து வீச்சுப் பற்றிய சரி, பிழைகள்பற்றிப் பேசுவதற்கு உரிமையுடையவர்கள்- மைதான நடுவர்கள் இருவரும், ஆட்டமத்தியஸ்தரும் மட்டுமே. ஆனால், பிஷன்சிங் பேடியின் அவதூறு வார்த்தைகள் தனிப்பட்ட தாக்குதலே என்கிறார் அவர்.

இது ஒரு புதிய போக்குத்தான். 'தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்ற வகையில் செயல்படும் பலர் - இந்தச் செய்தியை வாசித்தால், சிறிது உஷாராவார்கள். ஏனெனில், எதையும் எப்படியும் எவரையும் பற்றி - வாயில் வந்ததை எல்லாம் வாந்தி எடுக்கலாம் என்ற நிலையே இன்று காணப்படுகின்றது. இறுதியாக ஒரேயொரு கேள்வியை விஷன்சிங் பேடியிடம் கேட்கலாம். 'ஐயா பிரெட்லீயும், ஜேம்ஸ் கேட்லியும் பந்து வீச்சுத் தொடர்பில் பல சர்ச்சைகளுக்கு உள்ளானவர்கள், முரளி மீது அர்ச்சித்த அதே வசை வார்த்தைகளை, இவ்விருவர் மீது செலுத்தும் பலம் உங்களிடம் இருக்கின்றதா?

- **மரியா**

## மாவட்ட வலைப்பந்தாட்ட அணித்தெரிவு இன்று

**கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழர் தாயக தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும் வலைப்பந்தாட்ட அணித்தெரிவு - இன்று பிற்பகல் 2 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட அணிக்குத் தெரிவாகும் வீராங்கனைகள்- தெரிவின் பின் தொடர் பயிற்சிக்குச் சமூகமளிப்பதோடு 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை கிளிநொச்சியில் தங்கியிருந்து, மின்னொளியில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளவும் தயாராக இருக்கவேண்டும் என்று, விளையாட்டுத் துறையினர் கேட்டுக்கொள்கின்றார்கள்.**

# கண்ணீர் சிந்தும் ரோஜாக்கள்




எமது மலர்க் காணிக்கை

ஒரு சிவப்பு ரோஜாவை அவரின் மனைவி அடிலைய்ட் ஓவல் மைதானத்தின் கிரிக்கெட் தடத்தின் ஒருபுறம் நடப்பட்டிருந்த 3 விக்கெட்டுக்களின் பாதங்களில் கண்ணீர் மல்க வைத்தார். அவரின் இரண்டு பிளளைகளும் இரண்டு மஞ்சள் ரோஜாக்களை சிவப்பு ரோஜாக்களுக்கு அடுத்து வைத்தார்கள். அதற்கு முன்னதாகவே, அந்த விக்கெட்டுக்களின் ஒருபுறம் துடுப்பு ஒன்று சாத்தப்பட்டிருந்தது. மேலும், தெற்கு அவுஸ்ரேலிய அணியின் சிவப்புத் தொப்பியும் விக்கெட்டில் தொங்க விடப்பட்டிருந்தது.

அவுஸ்ரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வீரரின் அகால மறைவின் பின் நடைபெற்ற இறுதிச் சடங்கின்போது, மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன. கடந்த ஜனவரி 18 இல் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற தொரு சம்பவத்தின்போது, தலையில் காயமடைந்த 48 வயதான டேவிட் ஹூக்ஸ் மரண மடைந்தார். அதுவும், தெற்கு அவுஸ்ரேலிய பிராந்திய அணியின் வெற்றியைக் கொண்டாடிக்கொண்டிருக்கும்போதே, இந்தத் துக்ககர நிகழ்வு நடைபெற்றது.

அவர் முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் பெற்ற ஓட்டங்கள் 12671. இதில் அநேகமானவை - இந்தத் தடத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டவை. அவரது 32 சதங்களில் 20 சதங்கள் இதேதடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டவையே. எனவே, அவரது மைதானத்தில் இடையிடையே அவர் துடுப்பைச் சாத்திவைக்கும் அதேபாணியில், அவரது இறுதிநிகழ்வில் செய்யப்பட்ட அஞ்சலி அடையாளம் மிகவும் உருக்கமானது.

டேவிட் ஹூக்ஸ் அவுஸ்ரேலியாவிற்காக 23 டெஸ்ட் மற்றும் 39 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொண்டவர். தெற்கு அவுஸ்ரேலிய அணிக்காக 60 ஆட்டங்களில் தலைமை தாங்கியவர். அவ்ரது பூதவுடல் அடங்கிய பேழை - வெள்ளிநிற அமரர் ஊர்தியில் அடிலைய்ட் ஓவல் மைதானத்துக்குள் நுழைந்தபோது, அங்கு கூடியிருந்த 15,000 பேரும் அமைதியானதொரு சோக உணர்வுடன் - கையொலி எழுப்பி வரவேற்றார்கள். அவரது பூதவுடல் தாங்கிய பேழை அமரர் ஊர்தியிலிருந்து இறக்கப்பட்டு, உரிய பீடத்தில் வைக்கப்பட்டபோது, கிரிக்கெட் உலகமே நெகிழ்ந்துபோகும் அளவிற்கு மைதானம் திடீர் அமைதியாயிற்று. எதுவித அசைவும் இல்லை. கண்ணீர்த் துளிகள் மட்டுமே அமைதியாகச் சிந்திக்கொண்டிருந்தன.

டேவிட் ஹூக்ஸின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் - இந்நாள் முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர்கள், அவுஸ்ரேலிய அணித்தலைவர்கள், மேற்கிந்திய முன்னாள் தலைவர் கிளைவ் லொயிட், இங்கிலாந்தின் முன்னாள் தலைவர் ரோனி கிரெய்க், நியூசிலாந்து முன்னாள் தலைவர் மார்டின் குரோ.

இந்த இறுதிச்சடங்கிலும் ஒரு முக்கிய விபரத்தை பத்திரிகையாளர்கள் நினைவு கூர்ந்தார்கள். டேவிட் ஹூக்ஸ் 1977 இல் தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் (இங்கிலாந்து -அவுஸ்ரேலியாவிற்கிடையிலான கிரிக்கெட் நூற்றாண்டு விழா டெஸ்ட்) இங்கிலாந்து அணித்தலைவர் ரொனி கிரெய்க்கின் ஒரு ஓவரில், தொடர்ந்து ஐந்து பவுண்டறிகள் அடித்ததுதான் அது. அந்த ரோனி கிரெய்க்கும் மைதானத்தில் மனமுருகி நின்றார். ஒரு கிரிக்கெட் வீரரின் அகாலமறைவு மிகவும் துயரமானது. டேவிட் ஹூக்ஸ் நித்திய இளைப்பற்றியைப் பெற எல்லா ரசிகர்களும் பிரார்த்திப்பார்கள் என்பதே நிச்சயம்.

**-நிர்மலன்-**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# புறக்கணிக்க முடியாத

முடிந்தும் முடியாத உணர்ச்சித் தொடரான இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடரைத் தொடர்ந்து, மூவேந்தர்களில் சக்கரவர்த்தி யார் என்பதை நிர்ணயிக்கும் போட்டித் தொடரான இந்திய, அவுஸ்ரேலியா, சிம்பாப்வே அணிகள் மோதும் - முத்தரப்பு ஒருநாள் போட்டியில், கிரிக்கெட் உலகின் ஆட்சி மாற்றம் நிச்சயமாகிவிடும்போல் தெரிகிறது.

ஆட்சி மாற்றம் என்றதும், நாம் நினைத்த மாற்றமான அவுஸ்ரேலிய அணியின் ஆட்சி தவிடுபொடியாகி, இந்திய அணி - சக்கரவர்த்தியாகும் என்ற மாற்றம் ஒருபுறம். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட கிரிக்கெட் அரசியல் மாற்றம், சிம்பாப்வே அணியின் திடீர் எழுச்சிதான். இதுவும் எதிர்காலத்தில் கிரிக்கெட் உலகின் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் அமைந்ததுதான் சிம்பாப்வே அணி விளையாடிய கடந்த மூன்று போட்டிகளின் முடிவுகளும்.

முத்தரப்பு ஒருநாள் போட்டியின் எட்டாவது ஆட்டம் இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் கடந்த 24 ஆம் திகதி அடிலைட்டில் நடைபெற்றது. நாணயச் சுழற்சி



ஸ்ரிக்கின் இலட்சுமணன் பிளவர்

யில் வெற்றிபெற்று, இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மீண்டும் தொடக்க ஆட்டக்காரர்களில் மாற்றம் செய்யப்பட்டு பார்த்திவ் பட்டேலும், சஞ்செய் பங்கரும் களமிறங்கினார்கள்.

சச்சின் - சேவாக் ஜோடியின் அனல்பறக்கும் ஆரம்ப அதிரடியாட்டத்தை ரசித்த ரசிகர்களுக்கு, "பானகத்துரும்பு போல்" அமைந்தது பட்டேல் - பங்கரின் ஆட்டம். இருவரும் சிம்பாப்வே அணியின் துல்லியமான பந்துவீச்சில் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த சௌரவ் கங்கூலி அற்புதமாக ஆடுவார் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர். அதுவும் அவரின் தனி 'ஸ்ரைலில்' விளாசும் சிக்ஸர்களுக்காக காத்திருந்தனர். ஆனால், அந்த எண்ணத்திலும் மண்விழுந்தது. கங்கூலி ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார்.

அடுத்துவந்த, இணைப்பாட்டத்தில் எப்பவும் சாதனை படைப்போர் - ஏன் இதே மைதானத்தில் அவுஸ்ரேலிய அணிக்கெதிராக டெஸ்ட் போட்டியில் 303 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைதத- குடிய ரசுதினத்தை முனனிட்டு பத்மஸ்ரீ விருது பெறற ராவிட்டும், லக்ஸ்மன் ஜோடியிடம் சிம்பாப்வேயினரின் சில்மிஷங்கள் எடுபடவில்லை. ராவிட், ரொகான் கவாஸ்கரும் பெற்ற அரைச்சதங்களாலும், லக்ஸ்மன் இந்தத் தொடரில் பெற்ற மூன்றாவது சதத்துடனும் இந்திய அணி 280 ஓட்டங்களைப் பெற்றது.



குவிமையம் லக்ஸ்மன்

அடுத்து ஆடவந்த சிம்பாப்வே அணி - ஆரம்பத்தில் 46 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து திணறியது. கார்லைவ், எர்வின் ஆகியோரின் அற்புதமான இணைப்பாட்டம் இந்திய அணியை ஒரு கலக்குக்கலக்கியது. ஒரு நிலையில் முடிவு - சிம்பாப்வே அணிக்கு சாதகமாக இருந்தது. இருப்பினும், இந்திய அணி தற்போது கையாண்டு வரும் தந்திரங்களில் ஒன்றான, குறிப்பிட்ட நேரத்திற்குமேல் சிறப்பாக ஆடிவரும் வீரரை அல்லது இணைப்பாட்ட ஜோடியை ஆட்டமிழக்கச் செய்ய, அடுத்து வரும் வீரர்கள் நிதானமாக ஆடத் தொடங்குவர். ஓவர் செல்லச் செல்ல பெறவேண்டிய ஓட்டச் சராசரி அதிகரிக்க, போட்டியின் முடிவு இந்திய அணிக்கு சாதகமாக அமையும்.

இந்த உபாயத்தை இந்திய அணி இந்தப் போட்டியிலும் கையாண்டது. எர்வின் சிம்பாப்வேயின் 248 ஆவது ஓட்டத்திலும், கார்லைவ் 261 ஓட்டத்திலும் ஆட்டமிழக்கச் செய்தனர். தொடர்ந்து வந்தவர்கள் அதிரடியாக ஆடமுடியாமல்போக, இந்திய அணி மூன்று ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முத்தரப்பு போட்டியின் 9 ஆவது ஆட்டத்திலும் சிம்பாப்வே அணி இதேபோல் சிறப்பாக ஆடியது. இந்தப் போட்டியில் ரிக்கிப் பொண்டிங், மைக்கல் பெவனின் நிதான ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணி 279 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாப்வே அணி - 200 இற்குள் சுருளும் என ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், கிராண்ட் பிளவரின் அற்புத ஆட்டத்தால், 266 ஓட்டங்களைப் பெற்று, 13 ஓட்டங்களால் கௌரவமாகத் தோல்வியுற்றது. 8 ஆவது, 9 ஆவது போட்டிகளில் வழமைக்கு மாறாக சிம்பாப்வே அணி சிறப்பாக விளையாடியது. அந்த நிலையில் ஹீத் ஸ்ரீக் பேட்டி கொடுத்தார். "நாம் இப்போது உலகத்தின் தலைசிறந்த அணிகளுடன் விளையாடி வருகிறோம். ஒரு வெற்றியுடனாவதுதான் நாடு திரும்புவோம் என்றார். அந்த எண்ணத்தை பததாவது போட்டி நிறைவேற்றியிருக்கும். ஏனெனில், அவ்வளவு சிறப்பாக அமைந்தது சிம்பாப்வேயின் திறமை.

'பிச் றிப்போட்டின்' படி அன்றைய போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெறும் அணி -முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டால், போட்டியின் முடிவு அந்த அணிக்கு சாதகமாக அமையும் என்பதுதான். அந்த வகையில் சிம்பாப்வே அணி - நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று, களத்தடுப்பில் ஈடுபட்டது. சிம்பாப்வே பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீச்சில் ஈடுபட்டனர். அவுஸ்ரேலியா அணியின் முன்னணி வீரர்கள் ஒருவரும் அரைச்சதத்தினை எட்டமுடியவில்லை. ஆனால், மைக்கல் பெவன் - தன்தனித்திறமையால் அரைசசதத்தை எட்டினார். அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 263 ஓட்டங்களைப் பெற்றது.

கடந்த இரு போட்டிகளையும் நோக்கும்போது, சிம்பாப்வே அணிக்கு இது எட்டமுடியாத இலக்கு அல்ல இந்த இலக்கு. ஆனால், மழை வந்து சிம்பாப்வே அணியின் கனவை சிதறடித்ததுடன், அவுஸ்ரேலிய அணியை மீண்டும் ஒரு இக்கட்டான நிலையில் இருந்து காப்பாற்றியது.

இனி அடுத்து வரும் நான்கு போட்டிகளும் இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

# புதுவேகம்

V.V.S.லக்ஸ்மன் - அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்கு டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் போட்டிகளிலும் 815 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் சதங்கள் 4 இன்னும்



எழுவது நிச்சயம்

நான்கு ஆட்டங்கள் உள்ளன. எனவே, இவர் இந்தச் சுற்றுப்பயணத்தில் 1000 ஓட்டங்களுக்கு மேல் பெறுவார் என்பது, ரசிகர்களின் எதிர்பார்ப்பு. தற்போது முத்தரப்பு போட்டியில் 381 ஓட்டங்களைப் பெற்று முதலிடத்திலுள்ளார். அதே வேளை 'ஹீத் ஸ்ரீக் 14 விக்கெட் டுக்களைக் கைப்பற்றி முதலிடத்தில் உள்ளார். சிம்பாபவே அணி இன்னும் ஒரு போட்டியில் இந்திய அணியுடன் விளையாடவுள்ளது. அந்தப் போட்டியில், ஒருவேளை ஹீத் ஸ்ரீக்கின் வெற்றிக் கனவு நிறைவேறக்கூடும். ஆனால், இந்திய அணி அவ்வளவு இலேசுப்பட்ட அணியல்ல. இனிவரும் போட்டிகளில் சச்சின் விளையாடவுள்ளதால், போட்டிகள் அருமையாக அமையும். ரசிகர்களுக்கு இனிமையான போட்டிகள் காத்திருக்கின்றன.

- மாயவன்-

# சூறாவளியில் சிக்கிய மேற்கிந்திய அணி

மேற்கிந்தியத் தீவுகள் அணி - தென்னாபிரிக்க அணியுடன் விளையாடுவதற்காக 2 மாதகால சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு தென்னாபிரிக்காவில் வந்திறங்கியுள்ளது. 4 டெஸ்ட் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. 5 ஒருநாள் போட்டித்தொடர் ஆரமபமாகிவிட்டது. இந்த நிலையில் நடைபெற்று முடிந்த டெஸ்ட் போட்டிகளை பற்றி நோக்குவோம்.



நாளை நமதே சர்வான்

தென்னாபிரிக்காவில் வந்திறங்கிய லாரா - மேற்கிந்திய அணியின் தலைவர் 1999 ஆம் ஆண்டு சுற்றுப்போட்டிகளைப் போல அமையமாட்டாது என்று கருத்துத் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகள் ஆரம்பமாகி தென்னாபிரிக்கா அணி 561 ஓட்டங்களை முதல் இனிங்சில் பெற்றுக்கொண்டது. ஸ்மித் (132), கலிஸ் (158) சதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியமேற்கிந்திய அணி 410 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணியின் தலைவர் பிறைன் லாரா அற்புதமான இரட்டைச்சதத்தைப் பெற்றுக்கொண்டார். இதில் ஒரு ஓவரில் 28 ரன்களைக் குவித்து, புதிய சாதனை ஒன்றையும் நிலை நிறுத்தினார்.

இரண்டாவது இனிங்சில் 296/06 என்ற நிலையில் தென்னாபிரிக்கா தனது ஆட்டத்தை நிறுத்தியது. 368 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

மேற்கிந்திய தீவுகள் அணி வெறும 188 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களால் முதல் டெஸ்டில் தோல்விகண்டது. ஒரு இனிங்சில் இரட்டைச்சதம் ஒன்றை ஒரு வீரர் பெற்ற நிலையில் போட்டியில் தோல்வியடைந்தது. மேற்கிந்திய தீவுகள் அணி. என்ரினி மொத்தமாக 09 மேற்கிந்திய தீவுகள் விக்கெட்டுக்களை இந்தப் போட்டியின் இரண்டு இனிங்சிலும் சரித்துக்கொண்டார்.

முதலாவது டெஸ்டில் தோல்வியுற்ற மேற்கிந்திய தீவுகள் அணி. இரண்டாவது போட்டியை வென்றுவிடுவார்கள் என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். லாரா 72 ஓட்டங்கள், சர்வான் சந்திரபோல் ஆகியோர் சதமடித்தனர். ஆயினும், என்ரினியின் அபார பந்து வீச்சால் மேற்கிந்திய தீவுகள் அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் இரண்டாவது டெஸ்டில் தோல்விகண்டது.

இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும வெற்றியை இழந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் கருத்துக் கூறினார். அனைத்துப்போட்டிகளிலும் தோல்வியடையமாட்டோம். என்பது அவர் கருத்தாக அமைந்தது. மூன்றாவது டெஸ்டில் 532 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்க அணி. பதிலுக்கு முதல் இனிங்சில் மேற்கிந்திய திவுகள் அணி 427 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. லாரா (115), கைல் (116) ஆகியோர் சதமடித்தனர். இரண்டாவது இனிங்சில் 335 -3 என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திய தென்னாபிரிக்கா - 441 ஓட்டங்கள் பெற்றால்வெற்றி என்ற இலக்கை மேற்கிந்திய தீவுகள் அணிக்கு நிர்ணயித்தது. 354 -05 என்ற நிலைரயில் ஐந்தாம் நாள் நிறைவு பெற்றவேளை போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்தப் போடியில் கிப்ஸ் 142 கலிஸ் (130) ஆகியோர் தென்னாபிரிக்கா அணி சார்பில் சதமடித்தனர். லாரா (86), ஸ்மித் 105 பந்துகளில்- 105 ஓட்டங்களை தனது முதல் இனிங்சில் பெற்றுக்கொண்டார். லாரா மூன்றாவது போட்டியை சமநிலைப்படுத்தி தன்னுடைய கூற்றை மெய்யாக்கிக்கொண்டார். நாலாவது போட்டியில் வெற்றிபெறும் நம்பிக்கை அவருக்கு உதித்திருக்கலாம்.

நான்காவது போட்டி 604 - 06 பெற்ற தென்னாபிரிக்கா - ஆட்டத்தை நிறுத்தியது. இதில் ஸ்மித் (139), கிப்ஸ் (192), கலிஸ் (130 ஆட்டமிழக்காமல்) சதத்தைப் பெற்றுக்கொண்டனர். தனது முதல் இனிங்சில் 301 ஓட்டங்களை மட்டுமே மேற்கு இந்திய தீவுகள் அணியால் பெறமுடிந்தது. லாரா 77 ஓட்டங்கள் பெற்றார்.

பலோன் நிலையில் தொடர்ந்து இரண்டாவது இனிங்சை மேற்கிந்திய தீவுகள் அணிஆரம்பித்தது. 348 ஓட்டங்களுக்கு இரண்டாவது இனிங்சை இழந்தது. கைல்ஸ் (107) சர்வான் (119) சதம் அடித்தனர்.

தென்னாபிரிக்கா - 45 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கு. 3.5 ஓவரில் அவர்கள் இந்த இலக்கை அடைந்தனர். மேற்கிந்திய அணி உதிரிகளாக விட்டுக் கொடுத்தவை 15 ஓட்டங்கள். நான்காவது போட்டியை தென்னாபிரிக்கா வென்றது.

மூன்று போட்டிகளை வென்ற தென்னாபிரிக்கா அணி போட்டித் தொடரைக் கைப்பற்றியது. மற்றைய ஒரு போட்டி சமநிலையில் முடிந்தது.

உலகின் அசைக்க முடியாத ஒரு அணியாக கிளைவ்லொயிட் தலைமையில் இருந்த ஒரு அணி, போட்டிகளில் தோல்வியடைந்து தொடரை இழக்கும் பரிதா பகரமானநிலை. இந்த நிலைக்கு லாரா கருத்துத் தெரிவிக்கையில் களத் தடுப்புக்களில் கோட்டைவிட்டமையைக் குறிப்பிட்டார்.



மாறாத வேகம் ஜக்கலீஸ்

கைல்ஸ், சந்திரபோல், சர்வாப், லாரா புதிதாக ஒரு ஸ்மித் என்ற துடுப்பாட்ட வரிசை, எட்வேட்ஸ் கொலிமோர், டிலான் தேவைக்கேற்ப சர்வான் கைல்ஸ் என்ற பந்து வீச்சு வரிசைகொண்ட அணி- மேற்கிந்திய தீவுகள் அணி. இந்தநிலையில் லாராவின் கூற்றில் உண்மையிருப்பதாகவேபடுகிறது.

மறுபக்கமாக தென்னாபிரிக்கா அணியில் துடுபபாட்டத்தில் கிப்ஸ், ஸ்மித், கலீஸ் (700) தொடரின் அதிகூடிய ஓட்டம் பெற்றவீரர் ஆகியோரும், என்ரினி பொலக் பந்து வீச்சில் திறமையை வெளிப்படுத்தியவர்கள் இருந்தமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

500 ஓட்டங்களுக்கு மேல் இதுவரை காலமும் மேற்கு தென்னாபிரிகா அணி பெற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தொடரில் நான்கு போட்டிகளிலும் 500 இற்கு மேற்பட்ட ஓட்டங்களை பெற்றுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

டெண்டுல்கரைவிட லாராதான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று அவுஸ்ரேலியா வீரர் ஹேடன் கருத்துத் தெரிவித்திருந்தார். அந்த லாரா தலைமையிலான அணி - போட்டித் தொடரை இழந்துள்ளது. ஒருநாள் போட்டித்தொடர் ஆரம்பமாகியுள்ள இந்த நிலையில் அந்த தொடர்பற்றி லாரா ஏதேனும் கருத்து தெரிவித்துள்ளாரா என்பது கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

- வெண்மதி -

வாரநோக்கு

- யாழவன் -

# இலங்கையின் சட்டத்துறை மீது நம்பிக்கையிழந்துவரும் தமிழ்மக்கள்





கடந்த வாரம் ஏதோ ஒரு விதத்தில் அமைதியாகவே கடந்துசென்றது போலவே படுகின்றது. அசம்பாவிதங்கள் ஏதுமற்று, பெரியளவிலான ஆர்ப்பாட்டங்கள் ஏதுமின்றி நகர்ந்துபோனாலும் சில குறிப்பிடத்தக்க சம்பவங்களும் அமைதியான முறையில் கடந்த வாரம் நடந்தேறியுள்ளன.

அவற்றுள்ளே முதன்மையானதாக கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ சட்டவாளர்களுக்கான பட்டமளிப்பு விழாவினைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். மிகவும் அமைதியான முறையில், ஆர்ப்பரிப்புக்கள் எதுவுமற்று நடைபெற்றுமுடிந்த இந்த நிகழ்வுக்குப் பின்னால் நிறைய விடயங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அவர்களால் நடைமுறைப் படுத்தப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வரும் சட்டதிட்டங்களையே ஓரளவு முழுமையாக கற்றுத் தேறியிருக்கிறார்கள் இந்த சட்டவாளர்கள். இவர்களால் கற்கப்பட்ட சட்டமானது- இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் புதியதொரு திருப்புமுனையாகவே பார்க்கப்படவேண்டிய விடயமாகும்.

ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளும், தற்போதுள்ள சூழ்நிலைகளை வைத்து அவற்றோடு ஒப்பிடக்கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாது தமது அரசியல் மேடைகளில், அறிக்கைப் போர்கள் என்பவற்றில் புலிகளின் சட்டத்துறையை ரணில் அரசுக்கு எதிரான ஒரு துருப்புச்சீட்டாக பயன்படுத்திவருகிறார்கள்.

அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குறிப்பாக வன்னிப் பிராந்தியங்களில் புலிகள் தமக்கென ஒரு தனியான பொலிஸ் பிரிவை வைத்துள்ளார்கள். அவர்களுக்கென நீதிமன்றங்களை அமைத்துள்ளார்கள். அவற்றோடு நில்லாது தமிழீழ வைப்பகம் என்ற பெயரில் வங்கியும் திறந்துள்ளார்கள். இவை எதுவுமே இலங்கை அரசினுடைய அனுமதி பெறப்பட்டோ அல்லது அரசியல் யாப்பிற்கு உட்பட்டோ மேற்கொள்ளப்படவில்லை. எனவே, புலிகளின் இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் சட்டவிரோதமானவை. இதற்கு ரணில் தலைமையிலான அரசும் ஏதோ ஒரு விதத்தில் ஒத்துப்போகிறது.

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபு கூட, அவர்களது சட்டத்துறையையே வடக்கு - கிழக்கில் அமுல்படுத்த வேண்டுமெனக் கூறுகிறது. இது பிரிவினைக்கான முதற்படியாகும். இடைக்கால நிர்வாக வரைபை ஏற்றுக்கொண்டால் நாடு விரைவில் இரு துண்டாகும். அத்தகையதொரு நிலைக்கே ரணிலின் தலைமையிலான அரசு நாட்டை இட்டுச்செல்கின்றது என்றெல்லாம் ரணில் அரசுக்கு எதிரான பிரசாரங்களுக்கு புலிகளின் நீதி, நிர்வாக, சட்டத்துறையைப் பயன்படுத்தி வருகின்ற தென்னிலங்கை இனவாத சக்திகள்,

அத்தோடு நில்லாது, புலிகள் தமது கரும்புலிகள் படையை மட்டுமல்ல பொலிஸ் பிரிவையும் கலைத்துவிடவேண்டும். இலங்கையில் சட்டவரையறைகளுக்கு உட்பட்டு நிற்க சம்மதிக்க வேண்டுமென்றெல்லாம் வேண்டுகோள்களை அச்சுறுத்தும் பாணியில் அடுக்கடுக்காக சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வெளியிட்டுவருகின்றன.

ஆனால் புலிகள் எதற்காக தமக்கென, தமிழ்மக்களுக்கென ஒரு தனியான சட்டத் துறையை, பொலிஸ் பிரிவை, நிர்வாக, நீதித்துறையை உருவாக்கி வைத்துள்ளார்கள் என்பதை அக்கட்சிகள் உணரமறந்துவிடுகின்றன என்பதிலும் பார்க்க உணர மறுத்துவிடுகின்றனர். இதற்குரிய பதிலாக, தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கிளிநொச்சியில் காவற்துறை நடுவப்பணியகத்தை திறந்துவைத்து உரையாற்றும்போது கூறிய ஒரு கருத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

அதாவது, தமிழீழ காவற்துறையினராகிய தங்களுக்கு எதற்காக நீல நிற, வெள்ளைநிற சீருடை வழங்கப்பட்டுள்ளதெனின் - சிறிலங்கா பொலிஸாரை காக்கிச்சட்டையில் கண்டு பழகிய எமது மக்கள் - தங்களையும் காக்கிச் சட்டையில் காணும்போது சிறிலங்கா பொலிஸாரைப் போலவே உங்களையும் எண்ணிவிடுவார்கள்.

ஏனெனில், சிறிலங்கா பொலிஸார் மீது எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரதிபலிப்பானது வித்தியாசமானதாக இருக்கிறது. மக்களுள் பெரும்பாலானோர் சிறிலங்காப் பொலிஸாரை நம்பமறுக்கின்றனர். அவர்களால் பின்பற்றப்படும் சட்டநடைமுறைகளில்கூட அவநம்பிக்கை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர் எனத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை உண்மைக்குப் புறம்பானதாகவோ அல்லது வெறும் வாய்ச்சொல்லாகவோ கருதிவிடமுடியாது. இதற்குப்பின் இந்தக் கருத்துக்களை மெய்ப்பிப்பதுபோல நிறைய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. குடாநாட்டை வைத்துக்கொண்டே ஆயிரம் உதாரணங்களைப் பட்டியல் போடமுடியும்.

தமிழீழ சட்டத்துறையாளர்களின் பட்டமளிப்பு விழா நடைபெறுவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர், யாழ்.மாவட்டத்தை மையமாகக்கொண்டு இயங்கும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஒரு அறிக்கையினை விடுத்திருந்தது. அந்த அறிக்கையில், குடாநாட்டில் நடைபெற்ற குற்றச்செயல்களை தடுப்பதில் பொலிஸார் தவறிவிட்டனர் என சிறிலங்காப் பொலிஸார் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் பல விடயங்கள் இந்தக் கருத்துக்கு உதாரணமாக வலுச்சேர்ப்பனவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் விபரங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்து இரு தினங்களுக்கு பின்னரே கிளிநொச்சியில் தமிழீழ சட்டவாளர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றுள்ளது. இது மிகவும் பொருத்தமானதொரு சூழ்நிலையாகவே எமக்குப்படுகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் தற்போது குற்றச்செயல்கள் வெகுவாக மலிந்துவிட்டன. சந்திக்குச் சந்தியும், வீதிக்கு வீதியும்; வீட்டுக்கு வீடும் என சந்து பொந்துகளிலெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் குற்றச்செயல்கள் சதா நிகழ்ந்த வண்ணம்தான் உள்ளன.

பாலியல் வல்லுறவுகள், கொலைகள், சட்டவிரோத மதுபான உற்பத்திகள், விற்பனைகள் என குற்றச்செயல்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இவற்றைப் புரிவோரின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இந்த வாரத்தில்கூட இளைஞர்கள் சிலரால் ஊரெழுப் பகுதியில் வயோதிபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவமானது சிந்திக்கத் தெரிந்த பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதனைவிட, பதினாறு வயதுச் சிறுமியை நான்கு இளைஞர்கள் சேர்ந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவமொன்றும் கடந்த ஓரிரு வாரங்களுக்குள்ளே நடந்து முடிந்திருக்கிறது. இதனைவிட இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன், பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய - கல்வயல் பகுதியில் வைத்து இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளது.

ஆனால், இச்சம்பவம் தொடர்பான குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகள் இதுவரை அளிக்கப்படாமல், விசாரணைகள் வழமை போலவே நீண்டுசெல்கின்றன. ஒரு சில குற்றங்களில் குற்றவாளிகளில் எவரும் கைது செய்யப்படவில்லை. இது - இலங்கை பொலிஸாரின் இயலாத் தன்மையை வெளிப்படுத்துகின்றதா என எண்ணத் தோன்றுகின்றது.

கல்வயல் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ரி.சூரியகுமாரன் எனும் வர்த்தகரின் மீது சந்தேகம் இருப்பதாக கொலை செய்யப்பட்ட இளைஞரின் தந்தை கூறுகிறார். சூரியகுமாரன் கணினி வியாபாரத்தில் ஈடுபட்ட ஒரு வர்த்தகர் எனக் கூறப்படுகிறது. இவர் இதற்கு முன்னரும் இரு தடவைகள் கணினிகளை - கொலை செய்யப்பட்ட இளைஞரது வானில் யாழ்ப்பாணம் கொண்டுவந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலையில், சம்பந்தப்பட்ட இவ்வர்த்தகர் கொல்லப்பட்ட - இளைஞர் செலுத்திவந்த வானுடனும், அதிலிருந்த பத்துக் கணினிகளுடனும் மாயமாகிவிட்டார். இவரைக் கைது செய்வதற்கு முடியாமலோ அல்லது போனால், வேண்டுமென்றோ கைவிட்ட நிலையிலே பொலிஸார் உள்ளனர். இதற்குக் கொல்லப்பட்ட இளைஞர் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதும் ஒரு காரணமாகவிருக்கலாம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, கிளிநொச்சியில் தமிழீழ காவற்துறையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸாரா அல்லது தமிழீழ காவற்துறையினரா குற்றவாளி(களை)யைக் கைதுசெய்யப்போகிறார்கள் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விடயம்.

இப்போதுள்ள சமாதான சூழ்நிலையில் புதியதொரு சிக்கலும் எழுந்துள்ளது. அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் குற்றமிழைப்போர் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்ளும், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் குற்றமிழைப்போர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும் தப்பியோடி ஒளிந்து கொள்கின்றனர். இதனால் குற்றவாளிகளை உடனடியாக கைதுசெய்வது இரு பகுதியினருக்கும் தர்மசங்கடமான விடயமாகவுள்ளது.

ஆனால், இந்த விடயத்தில் தமிழீழ காவற்துறையினர் ஓரிரு சந்தர்ப்பங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். நாவாந்துறையில் திருட்டில் ஈடுபட்டு வன்னிப் பகுதிக்கு தப்பிச்சென்ற ஒரு பெண்ணை - கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் கைது செய்துள்ளனர். ஒரு பத்திரிகையில் வெளிவந்த புகைப்படத்துடனான விளம்பரத்தை மட்டும் வைத்துக்கொண்டே இந்த பெண் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கைதுசெய்யப்பட்ட வேளையில், இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகைப் பணமும், பெறுமதியான நகைகளும் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து எந்த அளவுக்கு தமிழீழ காவற்துறையினர் உஷாராக செயற்படுகின்றனர் என புரிந்துகொள்ளமுடிகிறது.

ஆனால், குடாநாட்டிலுள்ள சிறிலங்காப் பொலிஸாரிடம் இத்தகைய உற்சாகத்தை அவ்வளவாகக் காணமுடிவதில்லை. அதற்காக அவர்கள் திறமையற்றவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஏதோ ஒரு சில சலுகைகளுக்காக அவர்கள் தமது திறமைகளை விலைபேசுகிறார்கள். இதுதான் தமிழீழ காவற்துறையினருக்கும் இலங்கைப் பொலிஸாருக்கும் இடையிலான மிகப்பெரிய வேறுபாடாக இருக்கிறது.

இலங்கை பொலிஸார் சில சந்தர்ப்பங்களில் நீதியான, நியாயமான முறையில் செயற்படத் தவறிவிடுகின்றனர். ஒரு சில கசிப்பு வழக்குகளில் அவர்கள் தமது திறமையை அளவுக்கதிகமாக வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன், ஆங்காங்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது - தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகமும் செய்து மக்களை கலைத்திருக்கிறார்கள். இவைதான் அவர்களால் குடாநாட்டில் செய்ய முடிந்தவை.

இவற்றைவிட வேறு எதனையும் அவர்கள் உருப்படியாக செய்யவில்லை. ஓரளவுக்கு போககுவரத்து விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். அவற்றைக்கூட சிலவேளைகளில் ஐம்பது, நூறு ரூபாவுக்கு விற்றும்விடுகிறார்கள். இதனால், குடாநாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது.

குருநகர், மடத்தடிப் பகுதியில் நடைபெற்ற விபத்து ஒன்றின்போதும் - இருவர் அந்த விபத்தில் பலியாகியிருந்தும், நீதிவானொருவர் வந்து விபத்து நடைபெற்ற இடத்தைப் பார்வையிடுவதற்கு முன்னர் - விபத்துடன் தொடர்புடைய இராணுவ வாகனத்தை அவ்விடத்தை விட்டு அகற்றியுள்ளனர். இதைத் தட்டிக்கேட்ட மக்களை அடித்துத் துரத்தியுள்ளனர். இந்த வேளைகளில் எல்லாம் இலங்கையின் சட்டத்துறையும், நீதித்துறையும் தூக்கிவீசப்பட்டுள்ளதுடன், கேலிக்குரியதாகவும் ஆகியுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலை வழக்கில்கூட இத்தகையதொரு நிலையைக் காணமுடிகிறது. நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட பின், அவரது வீட்டுக்கு சென்ற மாவட்ட நீதிபதி பொலிஸாருக்கு பிறப்பித்த முதற் கட்டளையே இதுதான் - அதாவது, சம்பவம் நடைபெற்ற நேரம் நிமலராஜனின் வீட்டைச் சுற்றி நான்கு மூலைகளிலுமுள்ள காவலரண்களில் கடமையிலிருந்த இராணுவத்தினரை நீதிமன்றில் ஆஜர்படுத்தி அவர்களது வாக்கு மூலங்களைப் பதிவுசெய்யும்படி. ஆனால், மூன்று வருடங்களாகியும் அந்த உத்தரவு இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில், யாழ்.மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குடாநாட்டு பத்திரிகையாளர்களை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது தெரிவித்தார் - 'நிமலராஜனின் கொலைக்கும் இராணுவத்துக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை. இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. அந்தக் கொலை தொடர்பான விசாரணைகளுக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பை வழங்குவார்கள்' என. அந்த ஒத்துழைப்புக்கூட இதுவரை வழங்கப்படவில்லை, பெறப்படவும் இல்லை. இலங்கையில் சட்டவிதிமுறைகளுக்கு அமைய ஒரு கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஆனால், இந்தச் சட்டம்கூட நிமலராஜனின் கொலை தொடர்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை வைத்துப் பார்க்கும்போது இலங்கையின் சட்டத்துறை ஒரு கேலிக்குரியதாகவேபடுகிறது.

இந்தநிலையில், இந்தச் சட்டத்தை ஏற்று அதன்மீது நம்பிக்கை வைத்துச் செயற்படும்படி தமிழ்மக்களை வேண்டுவதோ அல்லது அவ்வாறு எதிர்பார்ப்பதோ அர்த்தமற்ற விடயமாகும். வெறுமனே குற்றவாளிகள் குறைந்தபட்ச தண்டனைகளோடு தப்பிவிடவே இலங்கையின் சட்டத்துறை உதவிபுரிந்து நிற்கின்றது. அத்தோடு அவசர காலத் தடைச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், ஊரடங்குச் சட்டமென தமிழ் மக்களின் குரல்வளைகளை நெரித்து, சித்திரவதைகளுக்குட்படுத்தி, சிறைக்கம்பிகளை எண்ண வைத்தவையும் இந்தச் சட்டங்கள் தான். இந்த நிலையில் எவ்வாறு தமிழ்மக்கள் அதன்மீது நம்பிக்கை கொண்டு செயற்பட முடியும்.

எனவே, கிளிநொச்சியில் கடந்தவாரம் நடைபெற்ற சட்டவாளர்களுக்கான பட்டமளிப்பு விழாவானது நல்லதொரு சகுனமாகவே எடுத்துக்கொள்ளப்படவேண்டும். புலரும் புதிய சூழ்நிலையில் சட்டதிட்டங்களுக்கு அமைவான ஒரு சமூகக் கோட்பாடு விரைவில் புலரும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை
-திருக்குறள்-

# நமது நோக்கு

## ஜனாதிபதியிடம் சில கேள்விகள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பியினருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டமைப்பு உடன்பாடு, எத்தனையோ வாதப் பிரதிவாதங்கள், கருத்தியல் அச்சுறுத்தல்கள், நம்பிக்கையீனங்கள், பேரம் பேசுதல்கள், முரண்பாடுகள், கொள்கைபேதங்கள் எனப் பல்வேறு சிக்கல்களுக்கிடையே விருப்பமின்றி தவிர்க்கமுடியாத சூழலில் எட்டப்பட்ட ஒன்று என இதற்கு முன்னரும் இப்பகுதியில் எழுதியிருந்தோம்.

வெளிப்படையாக, வரலாற்றுத்திருப்பமென்றும், ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியென்றும், தேசபக்தர்களிடையேயான ஒருமைப்பாட்டின் புதிய எழுச்சியென்றும் கூட்டணி சேர்ந்துள்ள இரு தரப்பையும் சேர்ந்த பலராலும் பரபரப்புடன் பிரசாரம் செய்யப்பட்டபோதிலும் உண்மை இதற்கு முற்றிலும் எதிர்மறையான ஒன்றேயாகும் என்பது இப்போது கூட்டமைப்பு உருவான ஒரு வாரகாலத்திற்குள்ளேயே தெளிவாக தொடங்கிவிட்டது.

எல்லாவகையிலும் நிர்ப்பந்தங்களுக்கிடையேயான ஒரு ஒப்பந்தமாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

ஒப்பந்தம் ஏற்பட்ட ஓரிரு தினங்களுக்கு முன்னமேயே ஜே.வி.பி யினர் இதனைத் தேர்தல் வரையிலான, அதாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசை தோற்கடிப்பதற்கான இலக்கின் அடிப்படையில் மட்டுமே உருவாக்கப்பட்ட கூட்டணி என்றே கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வில் தேசிய நலன்குறித்த அக்கறை எதுவும் இருக்க நியாயமில்லை.

உண்மையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும்போது, பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்கனவே மக்களிடையே செல்வாக்குச் சரிவொன்றை சந்தித்து வரும் நிலையில், பலமான நெருக்கடியைச் சந்திக்கவேண்டிய இக்கட்டான நிலை தற்போதைய அமைதிச்சூழலில் ஏற்பட்டே தீரும் என்ற அச்சத்தின் எதிரொலியாகவே இந்தக்கூட்டணியை உருவாக்கிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டது.

அதுமட்டுமல்லாது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் கனவில் திளைத்துக் கொண்டிருக்கும் அநுரா பண்டாரநாயக்கவும், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களிடையே இருக்கும் எதிர்ப்புக் குறித்து சந்திரிகாவுக்கும் தெரியும், அநுராவுக்கும் தெரியும்.

அதனால் தான் அநுரா தனது ஆதரவுத்தளத்தை பலப்படுத்தும் நோக்கில் ஜே.வி.பி யுடன் கூட்டமைப்பை உருவாகும் முயற்சியில் மிக நீண்டகாலமாக ஒரு 'புரோக்கராக' செயற்பட்டு வந்தார் என்றே கூறவேண்டும்.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் இப்புதிய கூட்டணியை உருவாக்குமாறு சந்திரிகாவுக்கு கொடுக்கப்பட்ட புற அழுத்தங்களில் அநுரா கொடுத்த அழுத்தம் முக்கியமானது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்கால அரசியல், பண்டாரநாயக்க காலத்து பரம்பரைப் பெயரில் தொடர்ந்தும் செல்வாக்குடன் இருக்காது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட பின்னர், கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற சந்திரிகாவின் தோழமைக்கட்சிகள் விலாச மற்றுப் போய்க்கொண்டிருக்கும் சூழலில் ஜே.வி.பியுடன் உடன்பாடு செய்வது அவரின் மனதிற்கு பெருமளவில் உடன்பாடு இல்லாத விடயமாக இருந்தாலும் கூட, ஒரு தவிர்க்க முடியாத ஆனால், ஆபத்தான அவசியம் என்பதை சந்திரிகாவால் புறக்கணிக்க இயலாமல் போய்விட்டது.

இதனைவிடவும் பேரினவாத அமைப்புக்கள், பௌத்தமத குருமார், போன்ற அனைவரையும் திருப்திப்படுத்தவும் அயலக நாடொன்றின் ஆலோசனையை அடக்கத்துடன் ஏற்றுக்கொள்ளவும் இந்தக் கூட்டணிக்கு சந்திரிகா ஒப்புதல் அளிக்கவேண்டியதாயிற்று.

இது சந்திரிகாவின் அரசியல் பலவீனத்தையே பகிரங்கமாக்கியுள்ளது.

இப்போது, பண்டாரநாயக்க தம்பதிகளின் மூத்த புதல்வியான சுமேத்திரா பண்டாரநாயக்கா இந்தக் கூட்டணியைக் கண்டித்துள்ளதுடன் தனது சகோதரி சந்திரிகாவிற்கு இதில் கருத்து ஒருமைப்பாடு எதுவும் இல்லைஎன்றும், அவரின் மனப்பூர்வமான விருப்பமின்றியே இந்தக் கூட்டமைப்பு உடன்பாடு எட்டப்பட்டதாகவும் கூறியுள்ளார். அத்துடன் இந்த முரண்பாடு எட்ட முழுமூச்சுடன் தரகராக செயற்பட்டவர்களான அநுராவையும், மங்கள சமரவீரவையும் கண்டித்துள்ளதுடன் ஆட்சியைக் கைப்பற்றவும் பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும், ஏற்படுத்தப்பட்டதும் நாட்டின் முன்னேற்றத்தை முதன்மைப்படுத்தாததுமான இந்தக் கூட்டணி மிக விரைவிலேயே உடைந்து பக்க விளைவுகளை ஏற்படுத்துமென்றும் எச்சரித்துள்ளார்.

சுமேத்திராவின் இக்கருத்தை சந்திரிகா இதுவரை மறுக்கவில்லை. அப்படியானால் இது ஒரு சுயநலக் கூட்டணிதான். என அவர் ஒப்புக்கொள்கிறாரா? தேசநலனைப் பாதிக்கும் கூட்டணி ஒன்றை அதன் ஆபத்துக்களை தெரிந்துகொண்டும், மனவிருப்பின்றி ஏற்படுத்திக்கொள்ள அவருக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்த நிர்ப்பந்தங்களை ஒப்புக்கொள்கிறாரா?

அப்படியானால், அவை எவை என்பதை பகிரங்கமாக்க முன்வருவாரா? இல்லை, தேசநலனை புறக்கணித்து சுயநலனுக்காக இந்த தவறான செயற்பாட்டினை செய்தது சரியென நியாயப்படுத்தி மக்களை ஏமாற்ற முனைவாரா?

அப்படியெனின் இலங்கையின் பாதுகாப்புக் குறித்து பெருமெடுப்பில் பேசிவரும் சந்திரிகா தான் அதன் அழிவுக்கான வழியையும் வகுத்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கும் பொறுப்பாகும் வரலாற்று தவறைப் புரிந்தவர் என்ற அவமானத்தை சுமப்பதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

## நாடும் நடப்பும்




செய்தி :- இலங்கை இந்தியாவிடம் உளப்பூர்வமான உதவியைதான் சமாதானத்திற்காக எதிர்பார்க்கிறது. பாதுகாப்பு ஒப்பந்தத்தையோ, ஆயுதங்களையோ அல்ல.

# இன்றைய இளைஞர்கள் மிகுந்த ஆற்றலும் வல்லமையுமுடையவர்களாக விளங்குகின்றனர்

### முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இன்றைய இளைஞர்கள் மிகுந்த ஆற்றலும், வல்லமையுமுடையவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறு தெரிவித்தார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

நேற்று கைத்தொழில், தொழிற்துறையில் நடைபெற்ற 'சரசவி சவிய' திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஆட்கள் இல்லாமல் இருக்கின்றார்கள். சாதாரணமாகக கடைக்குப் போவதற்குகூட போதிய ஆட்கள் இல்லாமல் இருக்கின்றார்கள்.

இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் தொழில் நிறுவனங்கள் எதுவும் இல்லாதநிலையே காணப்பட்டது. ஏ.9 பாதை திறந்ததும், பல்வேறு தொழில் நிறுவனங்கள், வர்த்தக நடவடிக்கைகள் குடாநாட்டில் காலூன்றத் தொடங்கி இருக்கின்றன.

இனறைய இளைஞர்கள் தொலைக்காட்சி, இன்ரநெற் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களைப் பெற்று ஆற்றலுடையவர்களாகத் திகழ்கின்றார்கள். முன்னைய காலத்தில் இவ்வாறான இளைஞர்களைக் காணக்கூடியதாக இருக்கவில்லை. இளைஞர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பின்மையே தற்போதைய குறைபாடாக உள்ளது.

உலகத்தில் லண்டனோ, கொழும்போ வேறு எந்த பிரதேசமானாலும் சரி, யாழ். குடாநாட்டைப்போல சிறந்த இயற்கை சூழ்நிலையையும், வாழ்விடங்களுக்கு உரிய சூழ்நிலையும் கொண்ட இடம் எதுவும் இல்லை.

ஆனால், வேலைவாய்ப்பு வசதிகள் அற்றநிலையில் வெளிநாடுகளில் வேலை தேடி செல்கின்ற சூழ்நிலையே இங்கு நிலவுகின்றது. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வேலையில்லை என்றிருப்பதை விட்டு இளைஞர்கள் உற்பத்தித்துறையில் முன்னேற வேண்டும்

### யாழ். வணிகர் கழகத் தலைவர் வேண்டுகோள்

வேலையில்லை என்றிருப்பதைவிட, எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தித்துறையில் ஈடுபடுவதன்மூலம்-நாட்டையும் முன்னேற்றி, தாமும் முன்னேற எமது இளைஞர்கள முன்வரவேண்டுமென யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் க.ஜெயசேகரன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் "பேர்வல் லைற்" எனும் சலவைத்தூளின் அறிமுகம் தொடர்பாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

போர்ச்சூழல் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கையின் பொருளாதாரத்திலே எமது உற்பத்திகள் பாரியதொரு இடத்தைத் தக்க வைத்துக்கொண்டிருந்தன. விவசாய, கடல்வள உற்பத்திப் பொருட்கள் தவிர, அலுமினிய உற்பத்திப் பொருட்கள், அஸ்பெஸ்ரன் சீற்றுகள் என இன்னோரன்ன வகையான பொருட்களை அன்று எம்மால் ஏற்றுமதி செய்யக்கூடியதாகவிருந்தது. இன்று அந்த நிலைமை மிகவும் குறைந்துவிட்டது.

தற்பொழுது கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றி வருவதற்காகச் செல்லும் லொறிகளில் பெரும்பாலானவை வெறுமையாகவே இங்கிருந்து செல்கின்றன. அந்த நிலையை மாற்றுவதற்கு நாம் தயாராகவேண்டும். எமது உற்பத்தியின் அளவை அதிகரிக்கவேண்டும். இதற்கு எமது இளைஞர்கள் முன்வந்து பங்காற்றவேண்டும்.

அவ்வாறு முன்வரும் இளைஞர்களுக்கு நாம் எம்மாலான உதவிகளை அளிக்கவுள்ளோம். சில வங்கிகள் படித்த வேலையில்லாப்பட்டதாரிகளுக்குச் சுயதொழில் வாய்ப்பிற்காக இருபது இலட்சம் ரூபாவரை கடன்கொடுக்கத் தயாராகவுள்ளன. நாம் எமது சிபாரிசுடன் அந்தக் கடனைத் தகுதியானவர்களுக்குப் பெற்றுத்தரமுடியும்.

பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகளுடன் கலப்பு உற்பத்தியிலோ, அல்லது வேறு விதமாகவோ இணைந்து உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமாகத்தான், வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் முன்னேறி வருகின்றன. அதனை நாமும் பின்பற்றி முன்னேறவேண்டும்.

அதற்காகவே நாம் முதலில் ஏ-9 பாதை திறக்கப்பட்டபோது வேறு நிறுவனங்களின் உற்பத்திகளை வரவழைத்து விற்பனை செய்தோம். ஆனால், தற்போது அந்த தொழில்நுட்பங்களை விட, சிறப்பான தொழில்நுட்பம் எம்மவர்கள் மத்தியிலே வளர்ந்துள்ளது. அந்த வகையில் இன்று மல்லாகத்தைச் சேர்ந்த ஆர்.மதிசேகரமெனும் இந்த இளைஞன் புதியவகை சலவைத் தூளொன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

அவரது எட்டுவருட முயற்சியின் பலனாகவே இந்தத் தயாரிப்பு வந்துள்ளது. அவரது முயற்சியைப் பாராட்டுவதோடு, எம்மால இயன்ற ஒத்துழைப்பை வழங்கவுள்ளோம். மக்களும் தரமான இந்த உற்பத்திகளை கொள்வனவுசெய்து, எமது இளைஞர்களை ஊக்குவிக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் புதிதாக அறிமுகமாகும் "பேர்வல் லைற்" எனும் சலவைத்தூள், சிறப்பு விளங்கங்களுடன் அறிமுகம் செய்யபபட்டது. இதனைத் தயாரித்த இளைஞர் இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி புதிய வகை நுளம்புத் திரியொன்றையும் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சகல வியாபார நிலையங்களிலும் விலைப்பட்டியல் இருக்க வேண்டும்

### ஆயப்பகுதியினர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சகல வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைப் பட்டியல் தொங்கவிடப்படவேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரின் ஆயப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வணிகர் கழகங்களினூடாக வர்த்தகர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்வரும் வகையிலே பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது: உணவு வகைகளும், பருப்பு வகைகளும், பால்மாக்களும், உள்ளீடுகளும், மருந்து வகைகள், தூய்மை பேண்பொருட்கள், தாள்கள், அச்சிட்டதாள்கள், புத்தகங்கள் -

கால்நடை உணவுகள், கால்நடை மருந்துகள், எரிபொருளும் உராய்வு நீக்கியும், தீப்பெட்டி, கற்பூரம், பத்தி, சாம்பிராணி, தசாங்கம், மெழுகுதிரி, பற்றறி, மின்குமிழ், ரயர், ரியூப், சிமெந்து, ஓடு, கூரைத்தகடு, பொறிகள், வேளாண் உள்ளீடுகள், கடற்தொழில் கருவிகள், கல்வனைஸ் வாளி, மாணவர் பயன்பாட்டுக்கருவிகள் என்பவற்றிற்கே முக் கியமாக விலைப்பட்டியல் தொங்கவிடப்பட வேண்டுமென் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக உடனடியாக இந்த விலைப்பட்டியல்களைத் தொங்கவிடும்படி யாழ்.வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (தீ)

## தெற்குத்திசையினிலே

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

# ஸ்ரீலங்காவின் அரசிலும், அரசியலிலும் அடுத்து என்ன நடக்கப்போகின்றது?

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமைக்குப் பின்னர், அவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நிலவிவரும் முறுகல் தீர்க்கப்படுமா? தீர்க்கப்படாதா? என்பதில் இன்னமும் இழுபறிநிலை எழுந்துள்ளது. ஜனாதிபதிக்கு உண்மையில், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தால் மாத்திரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அதற்கு தமது கட்சியின் நலன்களையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு, ஒரேயடியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள அவர் தயாரில்லை. எனவேதான், அவர் இன்னமும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்து வருகிறார். இதற்கு அவருக்கு வெளிநாடுகளின் அழுத்தங்களும் இல்லாமல் இல்லை. ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை தொடர்பில் பல்



வேறு காரணங்கள் கூறப்பட்டன. நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறைமை எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும், ஜனாதிபதியின் எஞ்சியுள்ள பதவிக்காலம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் போன்றவையே இதில் பிரதான பங்கை வகித்தன. இவற்றுக்கு அப்பால், வெளிநாடு ஒன்றின் அழுத்தம், அதுவும் இனப்பிரச்சினைத் தீர்வு, தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பப்படி இடம்பெற்றுவிடக்கூடாது என்ற ஆதங்கம் - மிக அயல்நாடு இதில் முதன்மை வகித்தது என்பதில் சந்தேகமில்லை.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றது தொடர்பாக நீண்டசிந்தனையை மேற்கொண்டுள்ளார். இவற்றைப் பொறுப்பேற்றால், சரியானவழியில் முன்கொண்டு செல்வது எவ்வாறு? என்பது குறித்து அவர் கலந்தாலோசனையில் ஈடுபட்டு வந்தார். இந்த நிலையில், மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை அவர் பெற்றுக்கொள்ள முனைந்தார். ஆனால், அது இன்று ஜனாதிபதியின் கட்சியையே பாதிக்கும் நிலைக்கு வந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஆட்சி பற்றிக் கூட்டிணைவுப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது, மக்கள் விடுதலை முன்னணி - தம்மை நாட்டைக்காக்கும் இரட்சகர்களாகவே காட்டுவதற்கு முனைந்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அமைக்கப்படும் கூட்டிணைவு - நாட்டை ஆபத்திலிருந்து மீட்பதற்காகவே எனக் கூறிய மக்கள் விடுதலை முன்னணி, பின்னர் தமக்குக் கூட்டிணைவின் மூலம் அமைக்கப்பட எதிர்பார்க்கும் அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்புகளையும் கோரிவருகிறது.

இதில் முக்கிமாக நாட்டின் கல்வித்துறையும், விவசாயத்துறையையும் மக்கள் விடுதலை முன்னணி தமது பொறுப்பில் எடுத்துக்கொள்ள முனைகிறது. இந்த இரண்டு அமைச்சுக்களும் நாட்டு மக்களைத் திசைதிருப்பும் பிரதான கருவிகளாக இருப்பதை, மக்கள் விடுதலை முன்னணி நன்றாகவே உணர்ந்துள்ளது. விவசாயப் புரட்சி, மற்றும் கல்விப் புரட்சி என்பதன்மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதில் அந்த முன்னணிக்கு நம்பிக்கை இருக்கிறது. ஏற்கனவே அந்தக் கட்சி வெளியிட்டுள்ள - நாட்டைக் கட்டியெழுப்பும் பொருளாதாரத் திட்டத்திலும் இவை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேரவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி எதிர்பார்த்திருந்த இலகக்கு, அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதனால், மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் மக்கள் மத்தியில் கூடியவரவேற்பும் கிடைத்துள்ளது.

மறுபுறத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் இந்தக் கூட்டுத் தொடர்பாகப் பாரிய உணர்வலைகளும் அங்கு காணப்படவில்லை என்றே கூறவேண்டும். தமது கட்சி - மக்கள் விடுதலை முன்னணியுடன் ஆட்சியமைத்தால், முக்கிய அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கும் ஒரு குழுவினரே, இந்த கூட்டிணைவிற்குப் பாரிய ஆதரவை வெளிட்டுவருகின்றனர். அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இந்தப் பட்டியலில் முதன்மை வகிக்கின்றனர். மங்கள சமரவீர முழுமையாக மக்கள் விடுதலை முன்னணிக்குத் தென்பகுதியில் அரசியல் களம் ஒன்றை அமைத்துக்கொடுத்துவிட்டார் என்றே கூறப்படுகிறது. அனுரா பண்டாரநாயக்க எப்போதும் ஆளும் கட்சியில் இருநது செயற்படவே விரும்புகின்ற ஒருவராக இருக்க, விரும்பும் ஒருவராவார். இவரின் கடந்தகால அரசியலை எடுத்துப் பார்த்தால், இது தெரியும். எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது, ஆளும் கட்சியாக மாறப்போகும் கட்சியுடன் அவர் இணைவது வழமையான விடயமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. அர்ஜுன ரணதுங்க - கிரிக்கெட்டில் பிரகாசித்ததோடு,





அவருக்குத் தமிழ் பேசும் மக்களிடையில் நல்ல மதிப்பு இருந்தது. முரளிதரனை வளர்த்துவிட்ட பெருமையைக்கூடத் தமிழ் மக்கள் அர்ஜுன ரணதுங்கவிற்கே வழங்கி வந்தனர். ஆனால், இன்று அவர் இனவாதியாகச் செயற்படுவதாகத் தமிழ்மக்கள் மத்தியில் கருத்துக்கள் எழுந்துள்ளன. ஆரம்பத்தில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றவேளையில், பௌத்த மதவாத, சிங்கள இனவாத கட்சி ஆதரவாளராகத் தம்மை இனங்காட்டிக்கொள்ளும் சிஹல உறுமயவுடன் இணைத்துப் பேசப்பட்டார். அந்தக் கட்சியில் அர்ஜுன இணையப்போகிறார் என்றே தகவல்கள் வெளிவந்தன. ஆனால், பின்னர் இது நடைபெறவில்லை. இந்தநிலையில் தற்சமயம் அவர் தேசப்பற்று இயக்கத்தின் முன்னிலை உறுப்பினராக விளங்குவது, அவரைத் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதியாகவே காட்டிக் கொண்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்தமையானது - ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் சந்தோசமான விடயமாக இன்னமும் மாறவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், அதற்குப் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே முன்னணியை மேற்கொள்ளவேண்டும்மென, ஜனாதிபதி கருதுவதால், இதில் பிரதான பங்கு தமக்கு வழங்கப்படுமானால், அவர் ஐககிய தேசியக் கட்சியுடன் ஒத்துப்போகத்தயாரகவே உள்ளார். ஆனால், ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையில் இணக்கம் இருக்கிறது. ஆனால், ஏனைய தமது கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் முதன்மை கொடுக்கவேண்டியவராக இருக்கும். எனவேதான், விட்டுக்கொடுக்கும் போக்கை அவர் கடைப்பிடித்து வருகிறார். பல தடவைகள், ஜனாதிபதிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவர முயற்சித்தபோதும், அது இந்த விட்டுக் கொடுக்கும் போக்குக் காரணமாகவே தவிர்க்கப்பட்டது எனலாம்.

இதற்குள் ஜனாதிபதி, தாம் பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சின் பொறுப்புகளை மீளவும் ஒப்படைக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தி வருகின்றது. ஆனால், விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடித்து, அது தமது முன்னையநிலைப்பாட்டுக்குப் பாதிப்புகள் ஏற்படுத்தி விடுமோ? என ஜனாதிபதி அஞ்சுவதனாலேயே இந்த மூன்று அமைச்சுக்களையும் தம்வசமே வைத்துக்கொண்டு, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணங்கிச்செல்லும் ஆட்சி அதிகாரம் ஒன்றையே அவர் கடைப்பிடித்து வருகிறார். இதற்கும் அவருக்கு அண்டை நாடு ஒன்றின் ஆலோசனை, உதவி கிடைத்து வருகிறது. அத்துடன், அவரும் ஐக்கிய தேசிய கட்சியை வழிக்குக்கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதில் ஒன்றுதான் மிலேனியம் சிற்றி ஆயுத முற்றுகை விவகாரமாகும். இந்த ஆயுத முற்றுகை தொடர்பில் ஜனாதிபதினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு, முழுமையாகப் பிரதம மந்திரியைக் குற்றம் கூறியுள்ளது. அண்மையில் உயர் நீதிமன்றமும் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் வழங்கிய தீர்ப்பில் - மிலேனியம் சிற்றி ஆயுத முற்றுகை விவகாரத்தில் செயற்பட்ட பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம் பொலவை, குற்றவாளியாகக் கண்டுள்ளது. ஊடக அமைச்சைப் பொறுத்தமட்டில், ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு .அது பெரிதும் உதவிவருகிறது. கடந்த 20 ஆம் திகதி - மக்கள் விடுதலை முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒப்பந்தம் செய்துகொண்ட போது, அதனை தேசிய நிகழ்வாக இந்த ஊடக அமைச்சு அதிகாரத்தின்மூலமாகவே மேற்கொள்ளமுடிந்தது என்பது உண்மை.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கும், பிரத



மருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகார முறுகலை தவிர்த்து, இருவருக்கும் இடையில் இணக்கம் ஒன்றைக் கொண்டுவருவதற்கான மனோ தித்தவெல, மற்றும் மலிக் சமரவிக்கிரம குழுவினர் மீண்டும் தமது பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

எனினும், இந்தப் பேச்சுக்களை எந்த அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை - ஐக்கிய தேசிய கட்சியிடம் வழங்குவதா? அல்லது இரண்டு கட்சிகளும் இந்தப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்வதா? என்பது குறித்துப் பேச்சுக்களை இந்த மனோ - மலிக் குழு ஆரம்பித்துள்ளபோதும், இறுதித் தீர்வு ஒன்றைக் காணமுடியாதநிலையே இன்னமும் இந்தக் குழு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தக் குழு தன்னிச்சையாகப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதில் கரிசனை கொண்டு பேச்சுக்களை நடாத்தவில்லை.

ஏதோவொரு அழுத்தத்தின் அடிப்படையிலேயே குழுவினர் பேச்சுக்களை நடத்திவருகின்றனர் என்பது தெளிவு. நாட்டில் அவசரமாகப் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்றால், அதில் தமிழீழ விடுதலைப் புலிகளும், மலையகம் உட்பட்ட அவற்றுக்குச் சார்பானவர்களும் சுமார் 32 நாடாளுமன்ற ஆசனங்களை வெற்றிகொள்வர். இது நாட்டில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே பொதுத் தேர்தல்தான் தற்போதைய முறுகலுக்குத் தீர்வல்ல என்றும் - ஜனாதிபதியும் - பிரதமரும் இணக்கம் காணவேவேண்டுமென இந்தியா வலியுறுத்தி வருகின்றது. அதேநேரம், எதிர்வரும் 17 ஆம் திகதி வொஷிங்டனில் இலங்கைக்கு உதவிவழங்கும் ரோக்கியோ நிதியுதவி மாநாட்டில் சமாதானத்தை விரும்பும் 4 நாடுகள்கூடி, இலங்கை விடயம் தொடர்பில் ஆராயவுள்ளனர். எனவே, அதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென பிரதமர் அவசரப்படுகிறார். எனினும், ஜனாதிபதியை அவரின் கட்சி உறுப்பினர்களைக்கொண்டு குழப்பிவரும் மக்கள் விடுதலை முன்னணி பொதுத் தேர்தல் ஒன்றே அதிகார மோதல் பிரச்சினைகக் குத் தீர்வு எனக் கூறுகின்றது. நடாளுமன்ற பொதுத் தேர்தல் நடக்கும் நடைமுறையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என ஏனைய கட்சிகள் கூறுகின்றன எனில், எது நடக்கப் போகிறது? பொறுத்திருக்கவேண்டிய கட்டாயம் இலங்கை மக்களுக்கே சொந்தம்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு புதிய வேலைவாய்ப்புத் திட்டம்!

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு உதவும் முகமாக, சரசவி சவிய உதவித்திட்டம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று சரசவி சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சாம் ஸ்ரெமியோ இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சி - கைத்தொழில் தொழில்துறை மன்றத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் சரசவி சவிய திட்டம் பற்றிய விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கான தருண அருண நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றீடான செயற்திட்டமாக இந்தத் திட்டம் அமையவுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி தனியார் நிறுவனங்களினூடாக வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. தனியார் நிறுவனங்களிலுள்ள பதவி வெற்றிடங்களை முதலில் பெற்றுக்கொண்டு, அந்த வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

அவ்வாறு நியமனம் பெறுகின்ற பட்டதாரிகள் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் சம்பளத்தைப் பெறுவார்கள். குறித்த நிறுவனங்கள் ஆகக்குறைந்தது 2000 ரூபாவை இவர்களுக்கு வழங்கும்.

தனியார் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற பணத்தொகையுடன் சேர்ந்த வகையில் சரசவி சவிய - 4000 ரூபாவை பட்டதாரிகளுக்கு உதவியாக வழங்கவுள்ளது.

இதனால், சரசவி சவிய உதவித்திட்டத்தின் கீழ் பட்டதாரி ஒருவர் குறைந்தது 6000 ரூபாவினை சம்பளமாகப் பெற்றுக்கொள்ள வகைசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள தனியார் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலுமுள்ள நிறுவனங்களுக்கு இந்தப் பட்டதாரிகள் நியமனம் பெற்றுக்கொள்ள வசதி செய்துகொடுக்கப் படவுள்ளது.

இந்தத் திட்டம் விரைவில் செயற்படுத்தப் படவுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகப் பட்டதாரிகளிடமிருந்து விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

பட்டதாரிகளின் விபரங்கள், அவர்களின் முழுமையான தரவுகள் என்பன கைத்தொழில், தொழிற்துறை மன்றத்தினால் விரைவில் சேகரிக்கப்படவுள்ளது.

இந்த சரசவி சவிச திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட தொழில் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பேர்லைற் எனும் புதிய சலவைத்தூள்

பேர்வலைட் எனும் புதிய வகை சலவைத்தூளொன்று புதிதாக அறிமுகம் செய்துவைக்கப் பட்டுள்ளது. இதனை மல்லாகத்தைச் சேர்ந்த ரி.மதிசேகரம் எனும் இளைஞரே தயாரித்துள்ளார். எட்டு வருடமாக தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆய்வுகளின்படி இந்தச் சலவைத்தூள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைப் பரிசோதனைக்குட்படுத்திய யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற்பீடம் ஏனைய வெளிநிறுவனங்களின் உற்பத்தியைவிட பலவகைகளிலும் பயனுள்ளதாக அமையும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எமது நாட்டின் நீர்த்தன்மைக்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பக்கவிளைவுகள் எதுவுமற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அறிமுக வைபவம் நேற்று யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. வணிகர் கழகத்தலைவர் க.ஜெயசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வைபத்தில் சலவைத்தூள் தயாரிப்பாளர் ரி.மதிசேகரம் அது தொடர்பான விளக்கங்களை அளித்தார். சலவைத்தூளின் பைக்கற் கடதாசியினால் ஆக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. எமது உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் மக்கள் நிறைந்த பங்களிப்பை வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழகத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளர். இதனைத் தயாரித்துள்ள மதிசேகரம் எனும் இளைஞர் யாழ்.பல்கலைக்கழக கலைப்பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது.

(தீ)

# இருவேறு குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 12 பேர் கொல்லப்பட்டனர்!

(பக்தாத்

ஈராக்கில் இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களில் மூன்று அமெரிகப் படையினரும், ஒன்பது ஈராக்கியர்களும் கொல்லப்பட்டதுடன், 45 பேர்படுகாயமடைந்தனர்.

எண்ணெய்வள நகரான இர்குக்விலிருந்து தென்மேற்கே 25 மைல் தொலைவிலுள்ள இடமொன்றில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி மீது நேற்று குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

42 ஆவது காலாற்படை டிவிசனின் தொடரணியே தாக்குதலுக்குள்ளானது. இதில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் தொடர்பான முழுமையான விபரங்கள் தமக்குக் கிடைக்கவில்லையென்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரான மோசூலில் பொலிஸ் நிலையத்தின் முன் அமைக்கப்பட்டிருந்த தடைகளை உடைத்துக்கொண்டு காரொன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் கட்டடப் பகுதியில் குண்டுத் தாக்குதலை நடத்தினார்.

நேற்று சம்பளம் வழங்கும் தினமாகையால், பொலிஸ் நிலையத்தில் ஏராளமானோர் கூடியிருந்தபோதே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலையடுத்து, அப்பகுதியில் இரத்தம் தோய்ந்த சடலங்கள் காணப்பட்டதாகவும், வீதிகளில் கார்கள் தீப்பிடித்து எரிந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் ஒரு பொலிஸார் உட்பட ஒன்பது ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும் 45 பேர் காயமுற்றதாகவும் மொசூல் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.





## பிரிட்டன் தீ விபத்தில் 11 பேர் உயிரிழப்பு!

பிரிட்டனின் உட்டிங்ஸ் ரொன் நகரில் அமைந்துள்ள ரோஷ்பாக் முதியோர் இல்லத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 11 முதியவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர்.

தீயணைக்கும் படையினரின் 40 வாகனங்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டதாகவும், இந்த இடத்தில் காயமடைந்தவர்கள் முதியவர்களா அல்லது அவ்விடத்தில் கடமையாற்றிய ஊழியர்களா என்பதை உடன் தெரிவிக்க முடியாதிருப்பதாகவும் தீயணைக்கும் படைப்பிரிவின் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியின் சிறிய பகுதியில் தீ பற்றிக் கொண்டதாகவும், இவ்வாறு பற்றிய தீ வேகமாகப் பரவியதாகவும் தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் இல்லத்தில் 49 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வந்தனர். இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், சிறு காயங்களுக்கு உட்பட்ட வேறு இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இது பெற்றுக் கொள்வதற்காக பிறிதொரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

43 படுக்கைகளைக் கொண்டுள்ள ரோஷ்பாக் இல்லத்தில் உளநோய்களினால் பாதிக்கப்பட்டவர்களும், மரணப் படுக்கையில் உள்ள நோயாளிகளும் பராமரிக்கப்பட்டு வந்துள்ளனர்.

உலக நோக்கு

## அமெரிக்காவின் பிரதான பகுதிகளில் தாக்குதல் நடத்த அல்கொய்டா திட்டம்!

### புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றனவாம்




(லண்டன்)

பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்கா செல்லும் பயணிகள் விமானங்கள் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு உட்படலாமென புலனாய்வு அறிக்கைகளை மேற்கோள்காட்டி அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரிட்டனின் 'விளைட் 223' ரக விமானம் தாக்குதலுக்கு உள்ளாகுவதற்கு அதிக சாத்தியங்கள் இருப்பதாக அந்தப் புலனாய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானம, கடந்த மாதம் இரு தடவைகள் தனது பயணங்களை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாட்டு விமானக் கம்பனிகளுக்கு அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கவுள்ளனர்.

கடந்த சில நாட்களாக நம்பிக்கைக்குரிய தகவல்கள் அமெரிக்க புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்துள்ளதாக பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரிட்டன் அல்லது பிரான்ஸிலிருந்து விமானங்களைக் கடத்தி, அமெரிக்காவின் முக்கிய இடங்களில் தாக்குதல்களை நடத்த அல்கொய்டா அமைப்பு திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா அச்சம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### 1979 ஆம் ஆண்டோடு முறிந்துபோன உறவை வலுப்படுத்த

## அமெரிக்க காங்கிரஸ் குழுவினர் அடுத்த மாதம் ஈரானுக்கு விஜயம்!




ஈரானுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன், அமெரிக்க காங்கிரஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அடுத்த மாதம் ஈரானுக்குச் செல்லவுள்ளது என அமெரிக்க செனட்டர் ஆர்லென் ஸ்பெக்டர் தெரிவித்தார்.

வொஷிங்ரனில் ஐக்கிய நாடுகளின் ஈரானியத் தூதுவர் மொஹமட் ஜவாட் சரீவ் கலந்துகொண்ட கூட்டமொன்றிலேயே ஈரானுக்கான விஜயம் தொடர்பான இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், ஈரானிடம் நிலையான கொள்கைகள் எதுவும் இல்லாவிட்டாலும் பேச்சுக்களில் ஈடுபடுவதற்குக் தாம் தயாராகவுள்ளதாகவும் ஆர்லென் தெரிவித்தார்.

பேச்சுக்கள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டால் 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஈரானிய புரட்சிக்குப் பின்னர் அமெரிக்க - ஈரானிய உறவை மீண்டும் புதுப்பித்துக்கொள்வதாக அமையும் எனவும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய நாடுகளுக்கான ஈரானியத் தூதுவரின் விஜயம் மிக முக்கியமானதொன்றாகும். ஏனெனில், ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்திலிருந்து தூதுவர் ஒருவர் வெளியேறுவதாயின் அதற்கான பிரத்தியேக அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், ஈரான் தூதுவரின் வொஷிங்ரன் விஜயம், பிரத்தியேக அனுமதி எதனையும் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், அமெரிக்க காங்கிரஸ் அதிகாரிகள் அடங்கிய குழு ஈரான் செல்ல அனுமதி வழங்குவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லையென அமெரிக்க இராஜாங்கச் செயலர் தெரிவிததுள்ளார்.

அண்மைக் காலமாக இரு நாடுகளுக்கு மிடையில் முறுகல் நிலை அதிகரித்து வந்துள்ளபோதிலும் ஈரான் தொடர்பான அமெரிக்காவின் தற்போதைய முடிவுகள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவை வலுப்படுத்தும் முயற்சியாக அமைந்துள்ளது.

இதேவேளை - டிசெம்பர் மாதம் ஈரானின் பாம் நகரில் ஏற்பட்ட பயங்கரப் பூமியதிர்ச்சியினால் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய அமெரிக்க மனித நேய உயர்மட்டக்குழுவைள ஈரானுக்கு அனுப் புவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரமான விசாரணையின் முன் அதிபர் புஷ் நிறுத்தப்பட வேண்டும்!



(வொஷிங்ரன்)

பேரழிவுதரும் ஆயுதங்கள் ஈராக்கில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஈராக்கின் மீது ஆக்கிரமிப்புப் போர் ஒன்றை அமெரிக்கா மேற்கொண்டிருந்தபோதிலும் அவ்வகையானஆயுதங்கள் எவையும் ஈராக்கில் இதுவரை அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை.

இதனால் தவறான புலனாய்வு அறிக்கைகளை மையமாகக் கொண்டு போர் ஒன்றை நடத்தியதாக புஷ் நிர்வாகத்தின் மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

புஷ்ஷின் மீது சுதந்திரமான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை தற்போது வலுவடைந்து வருகின்றது. இவ் விசாரணைக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக்கட்சியின் வேட்பாளர்களும் தமது ஆதரவினை தெரிவித்துள்ளனர்.

இவ்வார இறுதிக்குள் சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பேமவுண்ட் மாநில முன்னாள் ஆணையாளர் கோரிக்கை விடுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

முழுமையான விசாரணை ஒன்று தேவையென செனட்டர் ஜோன் மைக்கல் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே உண்மை என்ன என அறிதல் வேண்டும் எனவும் அதற்குள் விசாரணை தேவையில்லை எனவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்பிரச் சினையை ஒரு தேர்தல் பிரசாரமாக மாற்றியுள்ளதாக செய்திகள் தெரிக்கின்றன.

ஈராக்கின் மீதான போரை நீண்ட காலமாக விமர்சித்து வந்துள்ள வேமவுண்ட் ஆளுநர் டீன் தொலைக்காட்சி நிலையம் ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டபோது இப்பிரச்சினையை தனது தேர்தல் பிரசாரமாக மாற்றியுள்ளார்.

சுதந்திரமான விசாரணை ஒன்று வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்க அரசியலில் தற்போது முக்கிய பிரச்சினையாகும். இதனால் அமெரிக்க ஜனாதிபதி அவற்றிற்கு பதிலளித்தாக வேண்டிய நிலையில் இருப்பதாகவும் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்து வருவதும், விசாரணை தேவையெனக் கேட்கப்படுவதும் அதிகரித்துள்ளன. அதனால் பிளேயர் ஈராக்கில் போர் தேவைப்பட்டதற்கான காரணத்தை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவிக்கத்திட்டமிட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஊழியர்களின் பிரச்சினைக்கு தீர்வின்மையால் வேலை நிறுத்தத்தை நடத்தத் தீர்மானித்தோம்!

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இந்த வருடம் தை மாதம் எட்டாம் திகதி - 15 அம்சக் கோரிக்கையை முன்வைத்து போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் தை மாதம் 22 ஆம் திகதிக்கு முன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கால அவகாசம் கொடுத்தும், பிரச்சினை தீர்க்காத நிலையில் தொடர்சசியான வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளதாவது -

எம்மால் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட போராட்டத்தினைத் தீர்க்க பல்கலைகழக நிர்வாகத்திற்கு 22 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கியும், இது வரை எமது பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை.

எனவே, நாளை முதல் நாம் எமது வேலை நிறுத்தப் போராட்த்தினை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளோம். இந்தவேலை நிறுத்த காலத்திலும் ஊழியர் வரவுப்பதிவேடு சங்கத்தினால் பேணப்படும். எனவே, ஊழியர்கள் அனைவரும் தினமும் காலை 8.00 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நீர்வழங்கல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்த ஆரம்ப நிலையில் கடைமைபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழமையான பாதுகாப்புப் நிலைகளில் மட்டும் கடமையில் ஈடுபடுவர். பரீட்சைக் கடமைகளை ஆற்றவேண்டியுள்ளோர் சங்கத் தலைவரிடம் முன் அனுமதி பெறுவது அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரண்டாம் திகதி விடுமுறை தினமாக இருந்தாலும் அன்றைய தினம் முக்கியமானதொரு எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்த வேண்டியுள்ளதால் அன்றைய தினம் ஊழியர்கள் அனைவரையும் காலை எட்டுமணிக்கு தவறாது இராமநாதன் மண்டபத்தில் கூடுமாறும் ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

## 'விடுதலைப் புலிகள்' இன்று வெளிவருகிறது!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் தை மாதத் திற்குரிய 113 ஆவது குரல் 'விடுதலைப் புலிகள்' இயக்கம் தொடர்பில் கருத்துமாற்றம் காணும் 'சர்வதேச உலகம்' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

ஒரு குடையின் கீழ் இனவாதிகள், 'சமாதானத்துக்குச் சாவுமணி' என சொல்லும் ஆசிரியத் தலையங்கத்துடன் வரும் இந்த ஏட்டில், க. வே. பாலகுமாரன் எழுதிய என் தேவனே, 'என் சத்துருக்களுக்கு என்னை தப்புவியும்' என்ற கட்டுரையும் நம்பிக்கை இழந்த மக்களும் நிலை தடுமாறும் சமாதானமும்', கலாநிதி க. சோமஸ்கந்தன் எழுதிய இதுவரை நடந்த பேச்சுக்களும் 'தோல்விக்கான காரணங்களும்' போன்ற அரசியல் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு! - முப்பது ஆண்டுகளின் பின் ஒருமீள்பார்வை. என்ற நினைவூட்டல் கட்டுரையுடன் தென் சூடான் மக்களின் போராட்ட விபரிப்பான ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டு எழும் 'தென்சூடான்', மட்டக்களப்பின் எல்லையோர மீள்குடியேற்ற கிராமமான வடமுனை - 'கல்பேச் சை' மக்களின் உணர்வுகளையும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும், வழமையான அம்சங்களையும் தாங்கி இந்த ஏடு வெளிவருகின்றது.

## கிரிக்கெட்சபை தலைவராக சுமதிபால போட்டியிடமாட்டார்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபால இந்தப் பதவிக்கு மீண்டும் போட்டியிடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாக சபைக்கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவு இடம்பெறும்.

இதேவேளை, மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் சபைக்கூட்டத்தில் தம்மால் கலந்து கொள்ளமுடியாமல் இருக்குமென்று சுமதிபால அறிவித்துள்ளதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

## நோபல்...

நேற்று மாலை புலிகள் நோர்வேயின் ரொம்சோ பல்கலைக்கழக பேராசிரியரும் நோபல் பரிசுக் குழுவின் தலைவருமானகுழுவின் தலைவருமான பேராசிரியர் ஓலேடி கேட் நோகோவ்டேயைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

அத்துடன் மீன்பிடி விஞ்ஞானக் கல்லூரியின் பேராசிரியர்களான அனிகொள்விசன், ஜென்ஸ் ரிவோல்ட், ஹெல்முட் கிரேன் ஆகியோரையும் சந்தித்துப்பேசினர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் தற்போதய நிலவரம் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதுன்,மீன்பிடிச்சமூகம் எதிர்கொள்ளும் நெருககடிகள் குறித்தும் விளக்கிக்கூறினார்.

## சுதந்திர தினத்தை...

தமிழ் மக்கள், சிங்கள ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் போதுதான்,அவர்களுக்கான உண்மையான சுதந்திரம் கிடைக்கும் என்பது தெளிவாகிறது.

தமிழ் மக்கள் தங்களது வாழ்வுரிமைகளை பெற அதிக உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். அதிகளவில் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் மக்கள் தங்கள் விடுதலைக்காக அதிக விலை கொடுத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் சுதந்திர தினம் வருகிறது. இந்த சுதந்திரதினத்தை புறக்கணிப்பதன் மூலம் எமது உணர்வலைகளை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவோம். இதன் மூலம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது புரியவைக்கப்படும்.

எனவே, அன்றைய தினத்தில் மக்கள் தமது நாளாந்த வேலைகளைக் கைவிட்டும் வீட்டில் இருந்து சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் புறக்கணிக்க வேண்டும்.

அத்துடன், சிற்றூர்திகள் பேரூந்துகள் அனைத்தும் அன்றைய தமது வழமையான சேவைகளை இடை நிறுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல்.....

டக்ளஸ் தேவானந்தா மற்றும் சிவதாசன் உட்பட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்த இரு கட்சிகளிடையேயான சந்திப்பில் நாட்டின் நடைமுறை அரசியல், வடக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்துதல், அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கைஎன்பவை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பது குறித்து ஆராயப்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டணியின்....

சந்திரிகா குமாரதுங்க தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச அநுரா பண்டாரநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பி உறுப்பினர்களும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கட்சியின் நிர்வாகங்கள் குறித்து விரிவாகப்பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டணியின் நிர்வாகப் பதவிகளை வகிப்போர் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எனினும், நேற்று இரவு வரை இந்தப்பதவிகளை வகிப்போர் குறித்து விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

## இனந்தெரியாத குழு...

டனிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காததால் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு ஆறு வான்களில் ஆயுதங்களுடனும், பாதுகாப்புக் கவசங்களுடனும் வந்திறங்கிய பொலிஸார், அந்த இடத்தைச் சுற்றிவளைத்து சந்தேகத்திற்கிடமானவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சந்தேகத்திற்கிடமான ஒருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, மேலும் விசாரணைகளுக்கு சமுக மளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்திற்குக் காரணமான குழு வில் ஆறு தொடக்கம் எட்டு வரையானவர்கள் இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள பொலிஸார், தாக்குதலுக் குள்ளானவருக்கும், தாக்குதலை மேற்கொண்டவர்களுக்குமிடையே எந்தவிதமான தொடர்பிருந்தது என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றனர்.

சந்தேகத்திற்கிடமான கொலைக் கும்பல் கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட இரண்டு கார்களில் தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி...

பிடிக்க அதனை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி உறுதியாக உள்ளார். இதனை பலமுறை வெளிப்படையாக கூறியிருக்கின்றார் எனத் தெரிவித்தார்.

## கல்வியங்காடு...

விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் நேற்று இரவுவரை இனங்காணப்படவில்லை. சுமார் 53 வயது மதிக்கத்தக்கவரின் சடலமே யாழ். போதனா வைத்தியாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது உடல் அடையாளம் காண்பதற்கு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## சமாதானக் கருத்தரங்கில்...

கலந்துகொண்டனர்.

அரசியலமைப்பு விவகார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர்களான கே.பாலசூரிய, எச்.கமகே, சிறிலால் லத்தய ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு குடாநாட்டுப் பிரதிநிதிகளின் சமாதானம் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசியர் பொ.பால்சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி எஸ்.சிதம்பரநாதன் மற்றும் முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ். முஸ்லிம் சமுகப் பிரதிநிதி ஏ. என். சஹீர் உட்பட பலர் இந்த நிகழ்வில் தமது கருத்துக்களைக் கூறினர்.

## இந்தியாவுடனான பாதுகாப்பு...

சிந்திக்கவில்லை என்றும் தொடர்ந்தும் நோர்வேயின் அனுசரணை பெறப்படும் எனவும் உறுதியளித்தார்.

விடுதலைப்புலிகளுடன் மட்டும் தான் பேச்சு நடத்த வேண்டும். விடுதலைப்புலிகளின் கோரிக்கையாக அமையும் தீர்வு தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாகவே இருக்கும் என்பதையும் வலியுறுத்தினேன். அதில் உள்ள நியாயங்களையும் அவர் புரிந்து கொண்டார்.

இந்தியாவுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ பாதுகாப்பு ஒப்பந்த முயற்சி தற்போதைய நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல தடையாக இருக்கும் என மக்கள் கருதுவதையும் தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக்கு மேலும் ஒரு பின்னடைவு ஏற்படுவதாக அமையும் என்பதையும் எடுத்துக் கூறினேன். இது சம்பந்தமாகத்தான் பரிசீலிப்பதாகவும் உறுதியளித்தார். உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக கிராமங்களின் மத்தியிலுள்ள பாதுகாப்பு வலயங்கள் இராணுவ முகாம்களை உடன் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும்.என வலியுறுத்தினேன். அவ்வாறான முகாம்களின் விபரங்களை தனக்கு தரும்படியும் உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

போதிய காரணம் இன்றி தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை சுதந்திர தினம் அன்று பொது மன்னிப்புடன் கூடிய விடுதலையை வழங்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் காலம் போதாது எனவும் மிக விரைவில் இது சம்பந்தமான தகவல்களை திரட்டி உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

சமாதான முயற்சியில் அரசாங்கத்துடன் இணைந்து தற்போது தடைப்படடிருக்கும் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பித்து இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்குமாறும் மீண்டும் மீண்டும் ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன் என ஆனந்தசங்கரி வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



### திருமண வாழ்த்து



நிறைமனத்தான் இராசலிங்கம் தம்பதியினர் இறையுடனே பெற்ற மகன் பிரதீப மகிபன் கருணை சுரக்கும் கனகசபை தம்பதியர் தந்த இறைநலத்தாள் டைசாயினி தேவியை கலைபயில் புலவர் நாவெல்லாம் நிறைந்தோடும் தேம்சின் எழிற்கரையில் இன்புறவே லண்டனில் சேரும் நாள் இன்று எமக்கெல்லாம் இன்ப அன்பு தரும் நன்நாள் – நீவிர் வாழியவே.

திரு.திருமதி. நந்தகுமார்,
குடும்பம்
நெடுந்தீவு.

(616)

### College of Information Technology (CIT)

சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்

T.P:- 0777 -589703 E-mail:- avarangalcit@yahoo.com

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன -

**Ms Office**

100% செய்முறை வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பிரிவு I | சனி, ஞாயிறு | 8.30 - 10.30 A.m |
| பிரிவு II | செவ்வாய், வியாழன் | 4.00 - 6.00 P.m |
| பிரிவு III | செவ்வாய், வியாழன் | 7.00 - 9.00 P.m |
| பிரிவு IV | திங்கள், வெள்ளி | 7.00 - 9.00 P.m |

(உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

- DTP
  - பிரிவுI :- திங்கள், வெள்ளி 8.00 - 10.00A.m
  - பிரிவுII :- சனி, ஞாயிறு 11.30 - 1.30 P.m
- Diploma in Computer Studies
- Diploma in Computer programming
- Certificate Courses

Java, Turbo C++, Visual Basic, Computer Hardware, Web design (HTML), Coreldraw, Adobe photoshop, Adobe Pagemaker, Ms - Excel, Ms - Word, Ms - Access

OTHER SERVICES
- Sales for Computer & parts
- Computer repairing
- Networking (LAN)
- Software development
- Ronio work

Basic English Courses
(Grammar& Spoken English Practice)
Intermediate English Courses
(Grammar & Written & Spoken English Practice & Translation Practices)

பிரிவு I சனி, ஞாயிறு 12.30 - 2.30 P.m
பிரிவு II சனி, ஞாயிறு 7.00 - 9.00 P.m
(உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

- Special Children program (Age 3 to 18)

இயக்குநர்

(612)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.